[illegible]

V 4 N043 29 at 181

JL ✓

ന211, N28KN

N91.4.43

188941

58

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு
புரசைபாக்கம் சென்னை.

7-NOV 1931

Vol 4.] 1931 ஹு அக்டோபர் மீ 29உ [No. 43.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 841
2. சிதம்பரதேவர் சரிதம். Dr. V. S. அருணாசலம்பிள்ளை 843
3. சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம் 183 - 192) K. இராமரத்நம்ஐயர் B.A. 845
4. களவியற் காரிகை S. வையாபுரிப்பிள்ளை B A. B.L. 847
5. ஆண்டாள்—(கோதையார் யௌவனமும் அவர் அனுபவமும்) E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 850
6. கம்பராமாயணம் (பள்ளிபடைப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 852
7. யாப்பிலக்கணம் (கொச்சகக் கலிப்பா) 855
8. பழமுதிர்சோலை—நண்படாக் கயமை. "சபரி" 857
9. வர்த்தமானம். 859

கலாநிலயம்

18894

அரவிந்தர் திருவாக்கு.

கடவுளில்லை யென்று மறப்பது மிகக் கொடிதெனினும் அதனினும் சில உறுதிகள்பயக்கலாமெனத் துணிந்து சில கட்டுரைகள் முன்னர் எழுதினோம். சென்றவாரம், காந்தியடிகள் கடவுளைப்பற்றி இயம்பிய மொழிகள் இவ்விதழ்களில் எழுதப்பெற்றன. மகரிஷி எனலாகும் ஸ்ரீ அரவிந்தர் சரித்திரத்தின் ஒரு பகுதியாய்,, "லோகோபகாரி"ப் பத்திரிகையில் வெளிவந்துள அவர் மொழிகளையே ஈண்டுத் தருகின்றோம். நல்லார்சொற் கேட்பது நன்றாதலின், அல்லாதார் செய்யும் ஆரவாரங்களுக் கிடையே, இவையனைய வசனங்கள் எங்கும்பரவி எல்லார்மனத்திலும் ஊன்றி உறங்கும் உணர்வுகளை ஊக்கமொ டெழுப்பவேண்டுமென்று எம்மைப்போல் விழைவாரனைவரும், இதன் கீழ்வரும் கட்டுரையி லடங்கிய ஸ்ரீ அரவிந்தர் பெருமானது மெய்யுரைகளையும் தெய்வ அநுபவங்களையும் எதிர்ப்பட்டோர்க் கெல்லாம் உறவுறக்கூறி உய்விக்க முயல்வாரென நினைக்கின்றோம் :—

"கீழ்க் கோர்ட்டில் விசாரணை தொடங்கிற்று. எங்களை மாஜிஸ்ரேட்டின்முன் கொண்டுபோனார்கள். அப்போதும் பரமாத்மாவானவர் எனக்குச்சொன்னதாவது——உன்னைச் சிறையிலிட்டபோது அதைரியப்பட்டு, ஈசனே 'உனது துணை யெங்கே' என்று முறையிடவில்லையா? இப்போது இந்த மாஜிஸ்ட்ரேட்டைப் பார். சர்க்கார் வக்கீலை உற்று நோக்கு."—

நான் அவர்களைப் பார்த்தேன். அங்கு மாஜிஸ்ட்ரேட்டைக் காணவில்லை; வாசுதேவனையே கண்டேன். அங்கு நாராயணனே ஆஸனத்தில் அமர்ந்திருந்தான். சர்க்கார் வக்கீலைப் பார்த்தேன். அது வக்கீலல்ல; கிருஷ்ணனே, எனது நண்பனே காதலனே அங்கு வீற்றிருந்தான். அவன் என்னைப் புன்னகையுடன் பார்த்து, "இப்போது நீ அஞ்சுகிறாயா? நான் அனைவருள்ளும் இருக்கின்றேன். அவர்கள் செயல்களையும் மொழிகளையும் நானே ஆளுகின்றேன். நான் உனக்குத் துணையிருக்கின்றேன். நீ அஞ்சவேண்டாம். உன்மீது கொண்டுவரப்பட்டுள்ள இவ்வழக்கை என் சார்பிலேயே விட்டுவிடு. அதில் உனக்குச் சம்பந்தமில்லை. உன்னை இங்குக் கோர்ட்டு விசாரணைக்காக நான் கொண்டுவரவில்லை. மற்றொரு விஷயத்திற்காகவே கொணர்ந்தேன். எனது காரியம் நடப்பதற்கே இது ஒரு உபாயம்" என்றான்.

செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணை தொடங்கியது. எனது வக்கீலுக்கு நான் குறிப்புக்கள் எழுதலானேன். என்மீது சொல்லப்பட்ட சாட்சிகளின் பொய்யையும், சாட்சிகளைக் குறுக்குவிசாரணை செய்யும் குறிப்புகளையும் நான் எழுதி வைத்தேன். அப்போதும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது. என் சார்பாகப் பேசவேண்டிய முன் ஏற்பாடுகளெல்லாம் மாறின; ஒரு புதிய வக்கீல் எனது வழக்கை நடத்த முன்வந்து சேர்ந்தார். அவர் எனது நண்பர்; ஆனால் அவர் வருவதாகவே எனக்குத் தெரியாது. மற்ற எண்ணங்களை யெல்லாம் மறந்து தனது அலுவல்களை யெல்லாம் விட்டுவிட்டு நாட்கணக்காக, இரவு பகலாக உட்கார்ந்து, தனது உடலையும் கவனியாது என்னைக் காக்கச் சிரமப்பட்ட அம்மனிதனை-சித்தரஞ்சனதாசரை——நீங்கள் அறிவீர்கள். அவரைக் கண்டதும் நான் மகிழ்ந்தேன். ஆனால் இன்னும் எனது வாக்குமூலங்களை எழுதவேண்டு மென்றே நினைத்தேன். அப்போதும் என்னுள் ஒரு வாக்குப் பிறந்தது. இம்மனிதனே உனது கால் விலங்கை அவிழ்த்து விடுவிப்பான். காகிதங்களைத் தூர வைத்துவிடு. நீ அவனுக்கொன்றும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை, நான் வேண்டியவற்றை அவனுக்குப் புகட்டுகிறேன்" என்று அவ் வாக்கு எழுந்தது. அதுமுதல் நானாக எனது வக்கீலுடன் என் பிராதுப்பற்றி ஒருபேச்சுக்கூடப் பேசியதில்லை; (விசாரணை முழுவதிலும் அரவிந்தர் மௌனியாகவே இருந்துவிட்டார்.) கோர்ட்டில் என்னைக் கேள்விகேட்டபோது, என்பதிலும் விசாரணைக்குப்

பொருந்தாதிருந்தது. அவனே அனைத்தையும் கைக்கொண்டு நடத்தினான். அதன் முடிவு உங்கள் அனைவருக்குந் தெரியும்.

'நான் நடத்துகிறேன்; நானே துணை; அஞ்சாதே. நான் உன்னை எந்தக் காரியத்திற்காகச் சிறைக்குக் கொணர்ந்தேனோ அதைக் கவனி. நீ வெளியே வரும்போது ஒருபோதும் பயப்படாதே. நானே இதைச் செய்கிறேன். நீ யல்ல பிறரல்ல என்பதை நினை. ஆதலின் புயல்மூண்டாலும், இடர்களுற்றாலும், அசாத்தியமானவைகள் வந்தாலும் கலங்காதே. எனக்கு முடியாத தொன்றுமில்லை. எனக்கு எதுவும் சிரமமில்லை. நான் பாரதஜாதியிலிருக்கிறேன்; அதன் முன்னேற்றத்தில் நானே இருக்கிறேன். நான் வாசுதேவன், நான் நாராயணன். என் சித்தமே நிறைவேறும். பிறர் சித்தமல்ல; நான் சம்பவிக்க வேண்டுமென்று விரும்பியது சம்பவித்தே தீரும்; எத்தகைய மனிதபலமும் அதைத் தடுக்கமுடியாது" என்று என்னுள் ஒரு தொனி அடிக்கடி எழுந்துவந்தது.

இதன் மத்தியில், என்னைத் தனிமையினின்று என்னோடு குற்றஞ் சாட்டப்பட்டவ ரிடையே வைத்தனர். அவர்கள் அனைவரும் வாலிபர்கள்; அபார தைரியமும், தன்னலத்தியாகமும் மிகுந்தவர்கள். இவர்கள் பராக்கிரமத்திலும், நடையிலும், அறிவிலும் மேம்பட்டவர்கள். "இவர்களே என்னுணையால் மலரும் மகாசமுதாயத்தின் இளஞ் சந்ததியார்கள்; அவர்கள் உன்னினும் வலியர்; நீ எதற்காக அஞ்சவேண்டும்? நீ ஒதுங்கித் தூங்கினும் காரியம் விடாது நடக்கும்; இதோ இந்த வாலிபர்கள் உனது காரியத்தை இன்னும் திறம்பெற நடத்துவர். இந்து சமுதாயத்தை முன்னேற்றுவதற்கான வார்த்தையைப் பேச உனக்குச்சக்தியைத்தந்திருக்கிறேன்" என்று என்னுள்ளத்திற் குரைத்தான். அப்போது ஒரு சம்பவம் நேர்ந்தது. என்னைப் பரபரப்புடன் ஒரு தனி அறையில் சேர்த்தனர். அப்போது நடந்ததை இப்போது சொல்லச் சமயமில்லை. நாராயணன் தனது அற்புதங்களை நாளுக்குநாள் விளங்கக்காட்டி, ஹிந்து தர்மத்தின் தத்துவம் அனைத்தையும் என்னைச் சாட்சாத்கரிக்க வைத்தான்; இவ்வளவே நான் சொல்ல முடியும்.

"முன்னே எனக்குப் பல சந்தேகங்கள் இருந்தன; நான் இங்கிலாந்தில் அந்நியர் கொள்கைகளிடையே பயிற்றப்பட்டேன். இந்துதர்மத்தில் பல விஷயங்களை நான் வெறுங் கனவு கற்பனை மாயைகள் என்றே நினைத்தேன். ஆனால் நாளுக்குநாள் எனது உள்ளும் புறமும் அதன் உண்மையைக் கண்டு தெளிந்தேன். அதுவே எனக்கு ஜீவானுபவமாயிற்று. பௌதிகசாஸ்திரங்களால் விளக்கமுடியாத எத்தனையோ பல ரகசியங்கள் எனக்கு நன்குபுலனாயின. முதல்முதலில் ஈச்வரனைப் பக்தியாலும் ஞானத்தாலுமே முழுதும் அணுகவில்லை. சுதேசியும் ஆரம்பித்து நான் பொதுஊழியத்தை மேற்கொள்வதற்கு முன்பே பரோடாவில் ஆண்டவன் தரிசனமளித்தார். அப்போது நான் முழு நம்பிக்கையுடன் கடவுளை அணுகவில்லை, நாஸ்திகம், அவநம்பிக்கை, சந்தேகம் எல்லாம் என்னுட் குடிகொண்டிருந்தன. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற முழுஉறுதியும் இல்லை. இருப்பினும் என்னை ஏதோ ஒன்று உள்ளிருந்து, வேதம் கீதை இந்துதர்ம தத்துவம் இவற்றிற்கு இழுத்தது. இந்த யோகத்தில், வேதாந்தத்தையும் அடிப்படையாகக் கொண்ட இந்து தர்மத்தில், ஒரு பெரிய உண்மை யிருக்கின்றதென்றே நான் உணர்ந்தேன். ஆதலின் நான் யோகாப்பியாசத்தைத் தீவிரமாகக் கொண்டபோது அடியில் வரும் வணக்கத்துடன் அதைத் தொடங்கினேன்.

"நீ ஒருவன் உண்டாயின், என் இதயத்தை [illegible] நான் முக்தியை விரும்பவில்லை. பிறர் [illegible] யும்வேண்டவில்லை. இந்தப் பாரதஜாதியைக் கைதூக்கி விடச் சக்தியையே கேட்கிறேன். நான் இந்தச் சமுதாயத்தை நேசிக்கிறேன்; இதற்கே எனதுஜீவன் முழுதும்அர்ப்பணமாக வேண்டும் என்று நான் பிரார்த்திக்கின்றேன். இந்தப் பாரத சமுதாயத்திற்கே எனதுவாழ்வையும் பணியையும் ஆட்கொள்ளும்படியே நான் வேண்டுகின்றேன்." யோகசித்திக்காக நான் வெகுகாலம் சிரமப்பட்டேன். முடிவில் அதை ஒருமட்டிற்கு அடைந்தேன்; எனினும் நான் ஆவலாகவிரும்பியது இன்னும்எனக்கு நிறைவேறவில்லை. பிறகு தனிக்காவல் அறையில், "என்ன உத்திரவு கொடுக்கிறாய்?" என்று கேட்டேன். "ஆண்டவனே, எனக்கு உனது ஆதேசத்தைக் கொடு; இன்னது செய்வது, எப்படிச்செய்வது என்று எனக்குப் புலப்படவில்லை. எனக்கொரு திருவாக்குக் கொடு" என்று முறையிட்டேன். யோக உறவால் இரண்டு வாக்குக்கள் பிறந்தன.

"இந்தப் பாரதசமுதாயத்தை முன்னேற்றும் பணியை உனக்குக் கொடுத்துள்ளேன். நீ சீக்கிரம் சிறையினின்று விடுதலைபெறுவாய். இச்சமயம் நீ தண்டனைப்பட்டு, பிறர் போல நாட்டிற்காகச் சிறையில் காலங்கழிக்க வேண்டுமென்பது எனது விருப்பமல்ல; உன்னை அருட்பணிக்கு அழைத்துவிட்டேன்; அதுவே ஆதேசம்; எனது வேலையைச் செய்ய உனக்கு ஆதேசமும் தந்து விட்டேன்"— இதுவே முதல் திருவாக்கு; இரண்டாவது அடியில் வருமாறு:-"இவ்வாண்டில் உனதுதனிமையில், உனக்கொன்று சந்தேகமற, நிதர்சனமாகக் காட்டப்பட்டது; அதுவே இந்து தர்மத்தின் தத்துவம். இந்தத் தர்மத்தையே நான் உலகின்முன் உயர்த்திக்கொண்டிருக்கிறேன். இதையே ரிஷிகள், மஹான்கள், அவதார புருஷர்கள் மூலம் பூரணமாக்கி யிருக்கிறேன். அது இப்போது அகில தேசத்தார் முன்னும் எனது காரியத்தை நிறைவேற்றப் போகிறது. எனது வாக்கைப் பிரசுரப் படுத்தவே இந்தச் சமுதாயத்தை நான் முன்னேற்றி வருகின்றேன். இதுவே சனாதன தர்மம். இதற்குமுன் நீ இவைகளை உண்மையாக அறியவில்லை."—

"இப்போது உனக்கு இதைத் தெளிவாக்கிவிட்டேன். உன்னுள் இருக்கும் நாத்திகமும் சந்தேகமும் நீங்கின. ஏனெனில் உனக்கு உள்ளும் புறமும் தூலமாகவும் சூட்சுமமாகவும் நீ திருப்தி யடையும்படியான அத்தாட்சிகளைக் கொடுத்திருக்கிறேன். நீ வெளியேறும்போது உனது நாட்டாருக்கு இந்த உபதேசத்தைச் செய்.

"சனாதன தர்மத்திற்கு அவர்கள் முன்னேற்றப்படுவதைத் தெரிவி. அவர்கள் தங்களுக்காக வல்லாமல் உலக நலத்திற்காகவே விருத்தி யடைகிறார்கள் என்று சொல். உலக சேவைக்கே நான் அவர்களுக்கு விடுதலை தருகின்றேன். ஆதலின் பாரத தேசத்தின் முன்னேற்றம் சனாதன தர்மத்தின் முன்னேற்றமே. பாரத நாட்டின் பெருமை சனாதன தர்மத்தின் பெருமையே யாகும். பாரதநாடு அகண்ட பாரதமாக விரியும் என்ற போது சனாதன தர்மமே உலகெல்லாம் அகண்டமாக விரியும் என்ற பொருளைச் சொல். தர்மத்தாலேயே தர்மத்திற்காகவே இந்தியா வாழ்கிறது. தர்மத்தின் பெருமையே நாட்டின் பெருமை. நான் எங்குமிருக்கிறேன்; எல்லாரிடமும் எல்லாப்பொருள்களிலும் உள்ளேன். இந்த இயக்கத்திலும் நானே இருக்கிறேன். அதன் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவோரிடமும் இருக்கிறேன். அதை வழிமறித்து எதிர்ப்போரிடமும் இருக்கின்றேன். நான் ஒவ்வொருவர் மூலமாகவும் வேலை செய்கிறேன். யார் எது செய்தாலும் எனது காரியத்திற்குச் சகாயமாகவே செய்கின்றார்கள். வேறு விதமாக அவர்கள் செய்ய முடியாது. எதிர்ப்போரும் எனதுவிரோதிகளல்லர். அவர்களும் என் கருவிகளே. தெய்வ சக்தியே இந்தச் சமு[illegible]ல் அவதரித்துள்ளாள். நான் வெகுகாலமாக

இதைத் தயாரித்து வருகின்றேன். இப்போது காலம் வந்து விட்டது. நானே இதைச் சித்திபெறச் செய்வேன்."

"இதுவே நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியது. இந்து தர்மத்தைக் காத்து அதை உலகு அளாவப் பரப்புவதே நமது காரியம். இந்துதர்மமாவது என்ன? சனாதன தர்மமென்பதென்ன? இந்து சமுதாயத்தார் அனுட்டித்துக் கடலும் மலையும் சூழ்ந்த இந்த நாட்டின் தனிமையில் வளர்ந்ததாலும் பல்லாண்டுகளாக இந்த ஆரிய ஜாதியின் காப்பில் இருந்தபடியாலும் இதற்கு இந்து தர்மம் என்று பெயர் வந்தது. ஆனால் அது ஒரு நாட்டின் எல்லைக் கடங்கியது அன்று. நாம் இந்து மதமென்பது சனாதன தர்மம், அது நித்தியமானது. அதுவே அனைத்தையும் தழுவி ஓங்கும் அகண்ட தர்மம். அது எல்லா மதங்களையும் தன்னுளடக்கிச் சர்வ சம்மதமாக ஓங்குகின்றது. விரிவற்றமதம் சனாதனதர்ம மதமாகாது. இந்து மதமே விரிவுடையது. குறுகிய மதங்கள் சிறிது காலமே நிற்கும், பின்னர்த் தளர்ந்துவிடும். இம் மதமே உலகாயதத்தை வெல்லும். இதிலேயே பௌதிகதத்துவ ஆராய்ச்சிகள் அனைத்தும் முன்னேயே பொதிந்து கிடக்கின்றன. இது ஒன்றுலேயே மனிதன் ஆண்டவனை அருகே அடையக் கூடுமென்று நமது மனத்தில் அறிவுறுத்துகின்றது. மனிதன் கடவுளை அடையத்தகும் பல வேறு மார்க்கங்களையும் இம்மதம் ஒன்றே தன்னுள் அடக்கி நிற்கின்றது. அனைத்துள்ளும் அனைவருள்ளும் அவனே; அவனுலேயே நாம் ஜீவிக்கின்றோம் என்னும் உண்மையை இம்மதமே வலியுறுத்துகின்றது. இம்மதமே அவ்வுண்மையை அறிவிப்பதுடன் நமது ஜீவனின் ஒவ்வொரு பாகத்திலும் அனுபவிக்கச் செய்கிறது. இது ஒன்றே உலகம் இன்னதென்பதையும், அது வாசுதேவனின் லீலையென்பதையும் காட்டுகின்றது. இது ஒன்றே அந்த லீலையில் நமது ஆடல் இன்னதென்பதையும் அதன் நுட்பமான விதி நியமங்களையும் விளக்குகின்றது. இந்த ஒருதர்மமே வாழ்வை அத்யாத்மதர்மத்தினின்று எள்ளளவும் பிரிக்காமல் அமரவாழ்வு இன்னதென்பதை அறிவித்துச்சாவைப் பொய்யாக்கிவிட்டது.

இவ் வார்த்தையையே இன்று உங்களுக்குச் சொல்ல நான் தூண்டப்பட்டேன். எனக்கு எம்மட்டில் உத்தரவோ அதற்குமேல் வாய் திறப்பதற்கில்லை. தேசியம் அரசியல் விஷயமன்று. அது அத்யாத்ம தர்ம விஷயம். சனாதன தர்மம் பாரத சமுதாயம். சனாதன தர்மத்துடனேயே உதித்தது. அதனுடனேயே வளர்ந்தோங்குகின்றது. சனாதனதர்மம் குறையும்போது சமுதாயம் குறைவுபடுகின்றது. அது நசித்தால் இதுவும் நலியும். சனாதன தர்மமே தேசியம். இதுவே நான் உங்களுக்குப் பேசவேண்டிய சொல்"

"இத்திருவாக்குக்களின் உண்மையை அன்பர்களே, உள்ளே அறிக!'

இதன்மேல் யாம் விளக்க நிற்பன மிகச் சில. "எதிர்ப்போரும் என் கருவிகளே" என்று எம்பெருமான், அரவிந்தருக்கு உரைத்தமொழிகளின் தத்துவத்தினை உள்ளத்திலாழ்ந்து உணர்தல் வேண்டும். எவ்வகையில் அவ்வேதிலாரும் கடவுளின் கருவி யாதல்கூடுமென்பதை, 'மறப்பதும் உறுதியாமே' என்னும் நம் தலையங்கங்களில் ஒருவாறு ஊகித்துரைக்கத் துணிந்தனம்.

சிதம்பரதேவர் சரிதம்.

[828-வது பக்கத் தொடர்ச்சி]

18. தீர்த்த யாத்திரை

சிதம்பரனும் புகழேந்தியும் நாடு நகரம் முதலியவை யாவையும் கடந்து தாம் இராஜகுமாரன் மந்திரிகுமாரன் என்னும் உருத்தெரியாவண்ணம் வெயிலாலுங் காற்றாலும் உடல்கறுத்து மெலிவுற்று அகப்பட்ட விடத்தில் நேர்ந்தவேளையில் வாய்த்த வுணவை யருந்தி யாதொரு பொருளைக்குறித்தும் ஓரிடத்தை நண்ணியுஞ் செல்லாதவர்களாய்க் "கடவுளே" என்னும் ஓரே வைராக்கிய பிராந்தியுடன் திரிந்தனர். முருகபிரான் கோவில்கொண்டருளும் பழனியங்கிரிசென்று கிரிவலம்வந்து சன்னிதிபுக்குப் பல பாக்களால் அப்பெருமானதுபுகழைப்பாடித்துதித்துக்கொண்டுஊரில் பிக்ஷையேற்றுண்டு சிலநாட்கழித்து மதுரை ஸ்ரீரங்கம் ஜம்புகேஸ்வரம் முதலிய தெய்வத் தலங்கடோறுஞ் சென்று ஆங்காங்குப் போற்றித் துதித்து சிவாலயம் விஷ்ணுவாலயம் என்னும் வித்தியாசமின்றி யாத்திரை செய்துகொண்டு உத்திரதிசை நோக்கிச் சென்றனர். உடுப்பிபோய்ச் சுப்ரமண்யம் கண்டு வனத்தில் ஏகாந்த ஸ்வரூபமாய்க் கடவுள் தரிசனந்தர உள்ளம் பூரித்து உரோமம் சிலிர்ப்ப ஆனந்தக் கண்ணீரொழுக மனங் குழைந்துருகிப் பல பாக்களால் தோத்திரஞ் செய்து "ஓம் சரவணோற்பவா! சங்கரீ புதல்வா! பக்தரக்ஷகா! அடியேங்களுக்குக் குருவாகித் தோன்றி அருளவேண்டும் கடவுளே" என்று விண்ணப்பித்து மெய்மறந்து நின்றனர்.

இவர்கள் மனோநிலைமையையும் விரக்தியையுங் கண்ணுற்று ஆனந்தசித்தராய் இராஜகுமாரனது தீவிர பக்குவத்தையுணர்ந்து, இவனை எப்படியுங் கடைத்தேற்றல் வேண்டுமென்று எண்ணித் தண்டுகமண்டல ஜடாமகுடம் புலித்தோலாடை யணிந்த ஓர் யோகீஸ்வரர் முருகக்கடவுள் திருவுள்ளங் கொண்டதுபோல் அவர்களுக்கெதிரில் தென்பட்டார். இருவருங் கண்திறக்க எதிரில் யோகீஸ்வரரொருவர் நிற்கக்கண்டு அவர் பாதத்தில் விழுந்து தொழுது கைகட்டி வாய்புதைத்து முருகனருளே இதுவென்று உறுதிகொண்டு அவருத்திரவை எதிர்பார்த்துச் சலனமின்றிநின்றனர். யோகிச்வரர் இவர்களைச் சோதிக்கவெண்ணிப் புன்னகைசெய்து சைகைகாட்டி முன்னடக்கப் பின்தொடர்ந்தனர். திரும்பிப்பார்க்காது போகும் அவர்பிறகே பசி தாகம் சோம்பல் நித்திரை தோன்றாது இவரால் வீடு பெறலாம் என்று உறுதியாய் நம்பி ஓரே நோக்கமாய்ச் செல்ல அவர் தாம் தவம் புரிந்துவரும் மூகாம்பிகை வனம் சென்று அம்மனது சன்னிதிக்கு இருவரும் தொடரப்போய்த் தரிசனம் செய்வித்துப் பிரசாதமளிக்கச்செய்து தமதாச்சிரமமணுகி அருகிலவர்களை உட்காரவைத்துப் பிரசன்னமான தமது முகத்தில் பவளம் போன்ற உதடுகளைத் திறந்து முத்துப் போலொளிரும் பல்வரிசைகள் துலங்கக் குயிலோசையை யொத்த தமது கண்டத்தைத்திறந்து "நீங்கள் எதற்காக இப்படி விரக்திபூண்டு திரிகிறீர்கள்" என்று வினவினர்.

சிதம்பரன் அவர் முகப்பிரகாசத்தைக் கண்டு மகிழ்ந்து நமஸ்கரித்து, "ஐயனே தேவரீர் இன்று திருவுள்ளம்பற்றி அடியேனை வினவ என்ன பாக்கியமோ.யான் பாலவன அரசன் குலசேகரப்பெருமாள் புதல்வன். அவருக்கு ஆண்மகவின்றிப் பரமனை நோக்கித் தவம்புரிந்து வேண்ட இருபத்திரண்டாம் ஆண்டில் சத்துருவால் வதைக்கப்படும் மகவொன்றுண்டாம். அவனுக்கு ஓர் ஜீவன்முத்தன் உதவி எய்துமாயின் சில காலம்வாழ்வானென வரமளிக்கப் பெற்றாராம். எனக்கிப்போது 17 ஆண்டுகளும் நிகழ்ந்தன. அழியத்தக்க இத்தேகம் நீங்குமுன் எப்படியாவது கதியடைய இச்சித்து ஒருவருடகாலமாய்ப் பலவிடங்களிற் றிரிந்து கடைசியாய்த் தங்கள் கருணையொழுகும் தரிசனம் பெற்றேன். அடியேனைக் கடைத்தேற்ற வேண்டுகின்றேன்" என்றனன். அவரும்மிகமகிழ்ந்துபுகழேந்தியை உன் நோக்கம் யாதென்றார். "ஆண்டவனே நாயேன குலசேகரப்பெருமாள் சக்ரவர்த்தியின் முதன்மந்திரி புதல்வன். என் பெயர் புகழேந்தி. இவர் பெயர் சிதம்பரசேகரன். இவ்விராஜகுமாரர் இஷ்டப்படி பணிவிடைசெய்து மகிழ்விப்பதே என் விரதம். ஆகையால் அவரை எப்பொழுதும் பிரியாதிருந்து அவர் துன்பம் எனது துன்பமாகவும் அவர் உயிர் நீங்கில் எனதுயிரும் நீங்கும்படியும் வரமருளப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

யோகீஸ்வரர் இருவருடைய வைராக்யங்களையும் புகழ்ந்து களிப்புடன், "அப்பா சிறுவர்களா! உங்களுக்கு இப்போதே உலகத்தை வெறுத்தல் மிகவும் அரிது. உலக வின்பத்தைக் கொஞ்சமேனு மனுபவித்து அவைகளில் இச்சையொழிப்பதல்லவோ விரக்தி. ஆகையால் உங்களுக்குயாதொருவிதத் துன்பமுமணுகாதிருக்க ஓர் மந்திரோபதேசம் செய்கிறேன். அதை இடைவிடாது அனுஷ்டித்துவரின் சத்துருஜபமும் நினைத்தபடி சகலபோகவனுபவமும் புத்திரசம்பத்தும் திரவியலாபமும் நீர்கள் வெகு சுலபமா யடையலாம். அஷ்டமா சித்திகளைப் பெறும் வழியையும் உபதேசிக்கிறேன். அவைகளால் எல்லாப் போகபோக்கியங்களையும் பெறலாம். ஆனபடியால் நீங்களிப்போது கொண்டிருக்கும் பிராந்தியைவிட்டு மந்திரோபதேசம் பெறுவீர்களாக" என்றார். சிதம்பரன் மனங்கலங்கி, "ஐயனே இனியும் ஐந்து வருஷங்களில் தேகத்தை ஒழிக்குமெனக்கு இந்த வைபோகங்களெல்லாம் எதற்கு? சலனமில்லாதிருந்து ஆத்மசுகம் பெறும் மார்க்கம் ஒன்றே நான் வேண்டுகிறேன்" என்றான். புகழேந்தி, இராஜகுமாரருக்குச் சஞ்சலம் நீங்கும்படி கிருபைசெய்யவேண்டுமென்று முறையிட்டு நின்றான்.

யோகீஸ்வரர் களிப்புற்றுஇத்தகையவொரு ஆத்மாவுக்கன்றோ வினையகலச் செய்யவேண்டுமென்று இரக்கங்கொண்டு, "சிதம்பரா, என் சொற்கள் உன் செவிக்கேறவில்லை. எனினும் அஞ்சாதே, உன்னிஷ்டப்படி உனக்குதவிசெய்கிறேன். பிறகு உன் கர்மானுபவப்படி முடியட்டும்" என்றுரைத்து இராகத்வேஷாதிகுணங்களைப் புகலத் தொடங்கினார்.

"மோக்ஷமென்பதுஉன்னிலல்லது வேறில்லை. அதை ஆராயவேண்டுமேல் உலகங்களுக்குச் சுகதுக்கங்களுண்டாவதற்குக் காரணமாய பதினறுகுணங்களையறிய வேண்டும். அவை(1)இராகம்-பரஸ்த்ரீ கமன இச்சை (2) த்வேஷம்—ஒரு குற்றத்திற்குப் பதில் செய்ய வேண்டுமென்று தோற்றுவது (3)காமம்-பூமிபொருள் பந்து முதலியவைகளை மேன்மேலும்தேடவேண்டுமென்னும் ஆசை. (4) குரோதம்-தன்விஷயங்களில்தடைகெடுதி முதலியன செய்கின்றவர்களைத் தண்டிக்கத் தோற்றுவது. (5) லோபம்—தன் பொருளிற் கொஞ்சமேனும் பிறர்க் களிக்கமாட்டாத எண்ணம் (6)மோகம் ஒரு வஸ்துவின்மேலோ பொருளின்மேலோ அதிகப்பிரிய முதிப்பது. (7) மதம்—ஐஸ்வர்யம் தேகபலம் முதலியவை யிருப்பதால் நன்மை தீமை உணராது கர்விப்பது. (8) மாச்சரியம்-ஒருவர் சுகப்படில் சகிக்காமல் சஞ்சல முதிப்பது (9) ஈரிஷை—தனது துக்கம் மற்றவர்களுக்கும்வரவேண்டுமென்றுதிப்பது.(10)அசூயை—தனது சுகம் மற்றவர்களுக்கு வரலாகாதென்றுதிப்பது. (11)டம்பம் தனது நற்செய்கைகளைப் பிறர் புகழ வேண்டுமென்றுதிப்பது. (12) தர்மம்-தனது பொருள் சுகபோகாதிகள் பிறர்க்கில்லாதாகையால் தான் மேம்பட்டவனென்றுதிப்பது. (13) அகங்காரம்— தான் எல்லாம் உணர்ந்தவன் சகலமும் தேடவல்லவனென்றுதிப்பது. (14) இச்சை—பசிதாக நிமித்தம் அன்னபானுதிகளருந்த உதிப்பது. (15) பக்தி—கடவுள்மீது அன்பு உதிப்பது. (16) சிரத்தை—சற்சாவகாச விசாரணையிலும் ஆத்மானந்த விஷயங்களிலும் கவனிக்க வரும் மன நாட்டம். இவைகளில் முதற் பதின்மூன்று குணங்களால் துக்கமே நேரிடுமென்றுணர்ந்து அவைகளை அணுகாது விடுத்து, பின் மூன்றுகுணங்கள் தேகசுகம் மனோசுகம் ஆத்மானந்த சாதனங்களாகையால் அவைகளைக் கைப்பற்றவேண்டும்.

சிதம்பரன்—பதின் மூன்று குணங்களையும் நான் நகரத்தை விடும்போதே விட்டுவந்தேன். இனிச்செய்ய வேண்டுபவை யாவை?

யோகி—வீடடையத் தடையானவையை விட்டதாலும் அனுகூலமானவைகளை ஏற்றுக் கொண்டதாலும் ஆத்மானந்தத்திற் கொருவன் பாத்திரனாகான். அவனுக்கு நான்குசாதனங்கள்கூட இருக்கவேண்டும். அவை (1) நித்திய அனித்தியப் பொருளறிவு—என்றென்றைக்கும் அழிவின்றிச் சுயம்புவாய் ஆதியும் அந்தமுமில்லாக் கடவுளொருவரே நித்தியமென்றும் மற்றவையாவும் அழிந்து தேய்வடைவதால் அநித்தியமென்றும் உணரும் அறிவு. (2) இகபரலோக விராகம் - இவ்வுலகில் கிடைக்கத்தக்க எல்லாப் போகங்களிலும் சிறந்தவைகளை நற்செய்கைகளால் தெய்வலோகத்தில் அனுபவிக்கலாமென்றெண்ணும் யோகசுகங்களிலும் ஆசைவையாமலிருப்பதாம். (3) சமாதி கட்க சம்பத்து - சமம் முதல் ஆறுவகை. சமம் - மனதை அசையவொட்டாது நிறுத்தல். தமம் - இந்திரியத் தொழில்களை அடக்குவது. விடல் (உபரதி) - புத்திரன் மனைவி பொருள் முதலியவற்றில் ஆசைவையாதிருத்தல், கர்மங்கள் யாவையும் விடுத்தல். சகித்தல் - சுகதுக்கங்களைப் பொறுத்தல். சமாதானம்-இந்திரியங்களை அடக்கிமனதைவிசாரணையில் ஊன்றச் செய்து லயமடைவது. சிரத்தை - கடவுளிடத்தும் ஞானநூற்பயிற்சியிலும் அன்புவைத்தல் (4) முமுக்ஷுத்வம்-வீடடைய உதிக்கும் பேரவா.

சிதம்பரன்—ஸ்வாமி! சுகபோகங்களில் இச்சையை ஒழித்திருக்கின்றேன். சமாதி குணங்கள் எனக்குச் சற்றுமில்லையே என் செய்வேன்.

யோகி-சமமாதிகள் நினைத்தபோது அடைவதல்ல. பலநாட் பழக்கத்தாலும் ஈச்வர கடாக்ஷத்தாலும் ஒவ்வொன்றாய்ஒருவன் அடையவேண்டும்.இவைகள்தான் வீடுபெற வழிகள். ஓரே முயற்சியாய் மனஞ்சலியாது சாதனை செய்துவரின் அவைகளைச் சுலபமாய் அடையலாம். கடவுள் எல்லாப் பொருள்களிலும் எல்லாப் பிராணிகளிலும் எல்லா விடங்களிலும் சாக்ஷியாயிருந்து அவ்வவற்றின் விஷயங்களை எப்பொழுதும் அறிந்துகொண்டு அவைகளின் செய்கைகட்குத் தக்க சுகதுக்கங்களைக் கொடுத்து ஈடேற்றி வருகிறார் என்பதை உணர்ந்து தன்னாலானவரையில் மற்றப்பிராணிகட்கு உதவி புரிந்துவருவதே விரதமாகக் கொண்டு செய்வன யாவையுந் தனது கடமைப்பாடேயென்றெண்ணிப் பாவபுண்ய கர்மங்களனைத்தையும் கடவுளுக்கர்ப்பித்து வருவதில் கர்மபலன்கள் தன்னையணுகா', என்று கூறி ஓர் ஏகாந்த விடத்திற்கழைத்துச் சென்று ஆசிரமமொன்றமைக்கச்செய்து இராஜயோகம்அனுபவமாம்படி பிராணயாமசாதனை உபதேசித்துச் சிதம்பரனைநோக்கி, "அப்பா! இனி உன் இடைவிடா முயற்சியாலாவதன்றிப் பிறருதவியால் ஆவதொன்றுமில்லை. கடவுளை வணங்குவது எல்லாப் பிராணிகளையும் வணங்கி அவைகள் துன்பமகல உதவிபுரிவதேயாம் உனது மனம் வாக்கு காயம் முதலிய யாவையும் அவர்க்கே அர்ப்பணம் செய்து சாதனைபுரிந்து வருவாயாக" என்று கட்டளையிட்டுப் புகழேந்தியை அழைத்து "நீ உன் விரதப்படி இமை கண்ணைக் காப்பதுபோல் சிதம்பரனைப் பாதுகாத்து யாதொரு துன்பமுமணுகாதபடி பணிவிடைசெய்து ஜாக்ரதையாய் இருக்கவேண்டும்" என்றுரைத்துத் தனதாசிரமம் சென்றார்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[835-வதுபக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச் சருக்கம்

420. மின்னவிர் மணிமுடி வேந்தர் வேந்தவிக்
கன்னிநின் னருளினே கருதப் பட்டனள்
மன்னவ ரருளில ராயின் மக்களும்
பின்னவர் பெறுவதோர் பெருமை யில்லையே.

மின் அவிர் மணிமுடி வேந்தர் வேந்த - ஒளிவிளங்கும் மணிகளிழைத்த கிரீடத்தை அணிந்த இராஜாதிராஜனே, இ கன்னி - இந்த நமது மகள், நின் அருளினே கருதப்பட்டனள்- உன்னுடைய பேரன்பினால் நன்கு மதித்து ஆதரிக்கப்பட்டனள். மக்களும் - பிரஜைகளும், மன்னவர் அருள் இலராயின் - அரசாது அருளைப் பெற்றிலராயின், பின் - பின்பு, அவர்பெறுவது ஓர் பெருமை இல்லை - அவர் (பிறரால்) அடையும் பெருமை ஒன்றும் இல்லையாகும்.

மக்கள்- இங்கே புதல்வர் புதல்விகளுக்கும் பொதுவாகிய 'பிள்ளை' என்னும் பொருள் குறியாது, ஜனங்கள் குடிகள் என்னும் பொருளில் வந்துளது.

---

421. பிடிகளை மகிழ்களிற் றரசர் பெய்மலர்
முடிகளின் மணிபொர முரலு மொய்கழல்
அடிகள தருளினல் அம்மென் சாயலிக்
கடிகமழ் குழலினள் கவினும் எய்தினள். 184.

பிடிகளை மகிழ்-பிடிகளுக்கு இனியனசெய்து மகிழ்விக்கும், களிறு அரசர் - ஆண்யானைகளையுடைய அரசர்களின், பெய்மலர் முடிகளின் மணி பொர - மலர்மாலை சூட்டப்பெற்ற கிரீடங்களிலுள்ள இரத்தினங்கள் படிவதால், முரலும் மொய்கழல்அடிகளது-ஒலிக்கும் வீரகழலை அணிந்த தேவரீருடைய, அருளினல்- அருளினல், அம்மென் சாயல் - கடிகமழ் குழலினள்- அழகிய மெத்தென்ற சாயலோடு கூடிய இந்த மணம் கமழும் கூந்தலையுடைய மகள், கவினும் எய்தினள் - [illegible] அழகையும் பெற்று விளங்குவாள் ஆயினள்.

அடிகள் - சந்நியாசிகள் அல்லது கடவுளர்க்கு வழங்கப்படும் [illegible]மொழி.

---

422. திருமனைக் கிழத்திதன் தேங்கொள் சின்மொழி
மருமணி முடியினன் மகிழ்ந்து மற்றவள்
பருமணிப் பூண்முலை பாய மார்பிடை
அருமணித் தெரியறேன் அழிய வைகினன்.

மணி மருவு முடியினன் - மணிகள் பொருந்திய முடிமன்னன், திருமனைக் கிழத்திதன்-தனது மனையாட்டியின், தேன்கொள் சில்மொழி-இனிமை வாய்ந்த சில சொற்களைக் கேட்டு, மகிழ்ந்து-மகிழ்ந்து, அவள் பருமணி பூண்முலை பாய-அவளுடையபருத்த முத்தாரம்பூண்ட தனங்கள் அழுந்துவதால், மார்பிடை அருமணி தெரியல் தேன் அழிய - தனது மார்பிலுற்ற அரியபூக்களாற் கட்டிய அழகிய மாலையினின்றுதேன் உடைந்து ஒழுகும்படி, வைகினன் - அவளைத் தழுவிக் கூடி அன்றிரவு அவளுடன் களித்திருந்தான்.

---

423. மற்றைநாள் மகனையு மமைச்சர் தம்மையும்
கொற்றவாட் டடக்கையான் கூவிக்கொண்டிருந்
திற்றியான் கருதிய தென்று தொல்லைநூற்
கற்றகா வலனது கதையுஞ் சொல்லினன். 186.

மற்றை நாள் - மறுநாள், கொற்றம் வாள் தட கையான் - வெற்றிவாளை ஏந்திய பெரிய கையையுடைய மன்னன், மகனையும் அமைச்சர் தம்மையும் கூவி கொண்டு இருந்து - தன் மகன் அருக்ககீர்த்தியையும் மந்திரிமார்களையும் அழைத்துக்கொண்டு அவரோடு கூடியிருந்து, யான் கருதியது இற்று - நான்செய்யக் கருதியது இது என்று, தொல்லை நூல்கற்ற - பழைமையான நூல்களையெல்லாம் கற்றுணர்ந்த, காவலன் அது-தன்னுல் முன்னாள் சோதிமாலை என்னும் நாட்டுக்கு அதிபதியாகச் செய்யப்பட்ட புரோகிதன் சொன்ன, கதையும் - புராண வரலாற்றையும், சொல்லினன் - சொன்னான்.

---

424. வீங்கிய முலையவ டிருவும் வெம்முலைக்
கோங்கிய முகிலவன் உரிய பெற்றியும்
தாங்கிய புகழவன் மொழியத் தாரவர்
தேங்கிய [illegible]

தாங்கிய புகழ் அவன்-புகழைத் தாங்கிய மன்னன், வீங்கிய முலையவள் திருவும் - பருத்து வளர்ந்த முலைகளையுடைய தனது மகளுக்கு இனி வரப்போவதான பாக்கியத்தையும், ஓங்கிய முகிலவன்-வானத்தெழுந்த கருமேகத்தைப்போன்ற திருமேனியையுடைய திவிட்டனே, வெம்முலைக்கு உரிய பெற்றியும்-காமவிருப்பத்தை விளைக்கும் அவளுடைய முலைகளைத் தழுவி அணைத்தற்கு உரியவனாகிய தன்மையையும், மொழிய-சொல்ல(க்கேட்டு), தாரவர்-மாலையைத் தரித்த அவர்கள், தேங்கிய உவகையர் - மனம் நிறைந்த மகிழ்ச்சியராய், தெரிந்து சொல்லினர் - எல்லாவற்றையும் ஆய்ந்தறிந்து பின்வருமாறு பதில் உரைத்தார்.

வெம்முலை:, வெம்மை-விரும்பப்படுதல்.

425\. தெய்வமே திரிகுழற் சிறுமி யாவதற்
கையமே யொழிந்தனம் அனலும் வேலினாய்
செய்யதோர் தூதினித் திவிட்டன் றாதையாம்
வெய்யவே லவனுழை விடுத்தும் வேந்தனே 188.

அனலும்வேலினாய் வேந்தனே-கொதிக்கின்றவேலையுடைய மன்னவா, தெய்வமே திரிகுழல் சிறுமி ஆவதற்கு ஐயம் ஒழிந்தனம் - திருமகளே பின்னிய கூந்தலையுடைய சிறுமியாகிய சுயம்பிரபையாகத் தோன்றினாள் என்பதைக் குறித்து யாம் சந்தேகம் சிறிதும் இல்லாதவர் ஆயினேம்; செய்யது ஓர் தூது - நல்ல ஒரு தூதனை, இனி-இப்பொழுது, திவிட்டன் தாதையாம் வெய்யவன் உழை - திவிட்டனது தந்தையாகிய, நாமவேல் மன்னவனிடத்து, விடுத்தும்-அனுப்புவாம்.

426\. கற்றவன் கற்றவர் கருதுங் கட்டுரைக்
குற்றன வுறவுய்த் துரைக்கு மாற்றலான்
மற்றவன் மருசியே அவனை நாம்விடச்
சுற்றமுங் கருமமுஞ் சொல்ல வல்லனே. 189.

கற்றவன்-எல்லா நூல்களையும் கற்றுணர்ந்தவனும், கற்றவர் கருதும் கட்டுஉரைக்கு - அறிஞர் எண்ணிச் சொல்லும் உறுதி வசனங்களுக்கு, உற்றன உற உய்த்து உரைக்கும் ஆற்றலான் அவன் - தக்க மறுமொழிகளை ஆராய்ந்துபொருந்தச்சொல்லும்ஆற்றலையுடையவனும் ஆகியவன், மருசியே - மருசி என்பன் ஒருவனே ஆவான். அவனை நாம் விட - அவனை நாம் தூதாக அனுப்பினால், சுற்றமும் கருமமும் சொல்ல வல்லனே - நமது குலங்களின் சம்பந்தங்களையும் ஆக வேண்டிய கருமங்களையும் எடுத்துச் சொலல வல்லவன் அவன்.

'கற்றவன் கற்றவன்', 'உற்றனவுற்ற' என்பன பாடாந்தரம். இவை இரண்டு பாட்டும் மந்திரிமார் மாற்றம்.

427\. காரியந் துணிந்தவர் மொழியக் காவலன்
மாரியந் தடக்கையான் வருக வென்றொரு
சீரிய திருமுகஞ் சிறப்பொ டீந்தனன்
ஆரியன் கழலடி அவனும் வாழ்த்தினான். 190.

காரியம் துணிந்து அவர் மொழிய - இனிச் செய்ய வேண்டிய காரியம் இதுதானென்று தீர்மானித்து அவர் சொல்லக்கேட்டு, காவலன் - மன்னன், மாரி அம் தடக்கையான் வருக என்று - கொடையில் மேகத்தைபோன்ற விசாலமான கையையுடைய மருசியை அழைத்துவரும்படி ஏவலாளரை அனுப்பி அவனை வருவித்து, சிறப்பொடு ஒரு சீரிய திருமுகம் ஈந்தனன் - விசேஷமான முகமன் வசனங்களுடன் பயாபதிக்குக் கொடுக்கும்படி ஒரு சிறந்த மங்கல ஓலையையும் அவன் கையிற் கொடுத்தான். அவனும் - மருசியும், ஆரியன் கழல் அடி வாழ்த்தினான் - மன்னனது கழலணிந்த பாதங்களிற் பணிந்து விடைபெற்றுச் சென்றான்.

மருசியை மன்னன் 'மாரியந் தடக்கையான்' என்றது அவனும் ஓர் அரசன் மகனுதலானும், தூதாகச் சென்று தன் காரியத்தை முடித்து வைத்துதவும் அவனது வள்ளன்மையைக் கருதியும் என்க.

428\. மன்னவன் பணிகொடு மருசி வானிடை
மின்னவிர் முகிற்குழா முழங்கு வீதிபோய்த்
துன்னினன் சுரமைநாட் டகணி சூடிய [யே
பொன்னகர்ப் புறத்ததோர் பொழிலி னெல்லை

மருசி - அந்த மருசி, மன்னவன் பணிகொடு - மன்னவனிட்ட காரியத்தை ஏற்று, மின் அவிர் முகில் குழாம் முழங்கும் - மின்னல் விளங்கும் மேகக்கூட்டங்கள் கர்ச்சிக்கும், வானிடை வீதிபோய் - ஆகாய மார்க்கமாகச் சென்று, சுரமைநாட்டு அகணி சூடிய பொன் நகர்ப்புறத்தது - சுரமைநாட்டின்கண் வயல்கள் சூழ்ந்த போதன நகரத்தின் வெளிப்புறத்தில் உள்ள, ஒரு பொழிலின் எல்லை - சோலையின் எல்லையை, துன்னினன்-சேர்ந்தான்.

அகணி - மருதநிலம், வயல்.

429\. புதுமலர்ப் புட்பமா காண்ட மென்னுமப்
பொதுமலர்ப் பூம்பொழில் புகலும் பொம்மென
மதுமலர் பொழிதர மழலை வண்டினம்
கதுமல ரிணையொடு கலவி யாத்தவே. 192.

பூட்பமாகாண்டம் என்னும் - புட்பகாண்டம் என்ற, புதுமலர் பொதுமலர் பூ பொழில் - புதிய பலவகையானமலர்கள் பூத்த அழகிய சோலையினுள், புகலும்-அவன் புகுதலும், மழலை வண்டு இனம் - இன்னிசையுடன் ரீங்காரஞ்செய்யும் வண்டுக் கூட்டங்கள், கதுவும் மலர் - தாம் பற்றித் தங்கிய மலர்களில், பொம்மென - பொம்மென்று மொய்த்து, மலர் மது பொழிதர - அம்மலர்கள் தேனைச் சிந்தும்படி, இணையொடு-பெண்வண்டுகளோடு, கலவி யாத்த - தழுவிப் புணர்ந்தன.

பொம்மென - ஓரொலிக்குறிப்பு. மழலை - (உவமையாகு பெயர்) மழலையைப்போன்ற இன்னிசை. இணை-துணை. யாத்தல் - பின்னித்தழுவல்.

மந்திரசாலைச் சருக்கம் முற்றிற்று.

கலா நிலயம்.
1930-வருடத்திய இதழ்களைப்பற்றிய விவரம்
858-வது பக்கத்தில் காணலாம்.

களவியற் காரிகை

[832-வது பக்கத் தொடர்ச்சி]

இருவரு முள்வழி யவன்வர வுணர்தல் என்பது தலைமகன் சொல்வேறுபாடு கண்ட தோழி துணிந்துணர்தல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

பல்லில னாகப் பகலைவென் றோன்றில்லை பாடலர்போ
லெல்லில னாகத் தொடேனம் வினாவிவன் யாவன்கொலாம்
வில்லில னாகத் தழைகையில் வேட்டங்கொண் டாட்ட [மெய்யோர்
சொல்லில னாகற்ற வாகட வானிச் சுனைப்புனமே.

—திருக்கோவை - 60.

[பொதியில்
மழையும் புரைவண்கை வானவன் மாறன்மை தோய்
வழையுங் கமழு மணிநெடுந் தோட்டுவெண் சந்தனத்தின்
றழையும் விழைதகு கண்ணியு மேந்தித்தண் பூம்புனத்தி
னுழையும் பிரிய வுறானறி யேனவ னுள்ளியதே.

—பாண்டிக்கோவை.

கையது செம்மலந் தழையே வினவ
[தைய]புண்வாய் மாவே கைவிட்
டகலா னம்மவிவ் வகன்புனந்
தகையோ னுள்ளிய தறியோம் பெரிதே.

—பொருளியல்.

வில்வேறு பட்ட படியே வினைவேறு
சொல்வேறு பட்டபடி தோற்றுவிக்க — மல்வேறு.
போகாத தோளும் பொலிவழிய நம்புனம்விட்
டேகாத தென்கொ லிவர்.

—கிளவித்தெளிவு.

கரவுநாட்ட மென்பது, தோழி தலைமகளையுந் தலைமகனையும் நோக்கித் தன் மதியுடம்படுத்தல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

காகத் திருகணுக் கொன்றே மணிகலந் தாங்கிருவ
ராகத்து ளோருயிர் கண்டனம் யாமின்றி யாவையுமா
மேகத்தொருவ னிரும்பொழிலம்பலவன் மலையிற் [களே
றோகைக்குந் தோன்றற்கு மொன்றாய் வினவின்ப துன்பங்

—திருக்கோவை - 71

செறிந்தார் கருங்கழற் றென்னவன்
செந்நிலத் தைச்செருவில்
மறிந்தார் புறங்கண்டு நாணிய
கோன்கொல்லிச் சாரல்வந்த
[செறிந்தார்] கமழ்குஞ்சி யானே
டிவளிடை நின்றதெல்லா
மறிந்தேன் பலநினைந் தென்னையொன்
றேயிவ ராருயிரே.

—பாண்டிக்கோவை.

[சீதமணமு] நறுமலருஞ் சே[ர்]ந்ததுபோற்
காதன் மிகவுங் கலந்தனர்க—ளாதலினாற்
றிண்டிறற்கை வில்லிக்குஞ் செந்தா மரைமுகத்திவ்
வொண்டொடிக்கு மொன்றே யுயிர்.

—பழம்பாட்டு.

இவையெல்லாம் 'முன்னுறவுணர்தல்' [இறை - 7.] என்னு மிலக்கணத்துட் கண்டுகொள்க.

சேட்படுத்த லென்பது, இப் புனம் மிகவும் காவலுடைத்து: நீர் இயங்கன்மின்: எனச் சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

முனிதரு மன்னையு மென்னையர் சாலவு மூர்க்கரின்னே
தனிவரு மிந்நிலத் தன்றைய குன்றமுந் தாழ்சடைமேற்
பனிதரு திங்க ளணியம் பலவர் பகைசெகுக்குந் [னே.
குனிதரு திண்சிலை கொண்டுசென் றுன்சுடர்க் கொற்றவ

—திருக்கோவை - 98.

புல்லா வயவர் நறையாற் றழியப் பொருதழித்த
வில்லான் விளங்குமுத் தக்குடைவேந்தன் வியனிலத்தோ
ரெல்லாமிறைஞ்சநின் றோன்கொல்லிமல்லலஞ்சாரலிங்கு
நில்லா தியங்குமின் காப்புடைத் தையவிந் நீள்புனமே.

—பாண்டிக்கோவை.

நண்ணுத லரிதே தண்ணெ ளளா
ளெண்ணிய குறையொன் றுளதெனின்
நண்ணுது முடித்தி யண்ண லீயே.

—பொருளியல்.

மறையே லென்பது, தோழி தலைமகனை நின்குறையென்னை மறையாதொழிதி யெனச் சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

பண்டா லியலு மிலைவளர் பாலகன் பார்கிழித்துத்
தொண்டா லியலுஞ் சுடர்க்கழ லோன்றொல்லைத் தில்லை [யின்வாய்
வண்டா லியலும் வளர்பூந் துறை[வ] மறைக்கிலென்னைக்
கண்டா லியலுங் கடனில்லை கொல்லோ கருதியதே.

—திருக்கோவை - 105.

மின்னை மறைத்தசெவ் வேல்வலத்
தால்விழி ஞத்துமொன்னார்
மன்னை மறைத்தவெங் கோன்வையஞ்
சூழ்பௌவ நீர்ப்புலவு
தன்னை மறைத்திள ஞாழல்
கமழுந்தண் பூந்துறைவா
வென்னை மறைத்த விடத்திய
லாதுகொ லெண்ணியதே.

—பாண்டிக்கோவை.

கடிகமழ் கண்ணி நெடுவரை யாயத்து
வடிவே லண்ண லென்னை மறைப்பின்
முடியா தாகுநீ முன்னிய வினையே.

—பொருளியல்.

கூறென விடுத்த லென்பது, தோழி தலைமகனை நின்குறை நீயே சென்றுரை யெனச் சொல்லியது. அதற்குச் செய்யுள்:—

அந்தியின் வாயெழி லம்பலத்
தெம்பர னம்பொன்வெற்பிற்
பந்தியின் வாய்ப்பல வின்சுளை
பைந்தே னொடுங்கடுவன்
மந்தியின் வாய்க்கொடுத் தோம்புஞ்
சிலம்ப மனங்கனிய
முந்தியின் வாய்மொழி நீயே
மொழிசென்றெம் மொய்குழற்கே.

—திருக்கோவை - 99

சேயே யெனநின்ற தென்னவன்
செந்நிலத் தேற்றதெவ்வர்
போயே விசும்பு புகச்செற்ற
கோனந்தண் பூம்பொதியில்
வேயே யனையமென் றோளிக்கு
நின்கண் மெலியுறநோய்
நீயே யுரையாய் விரையா
ரலங்க னெடுந்தகையே.

—பாண்டிக்கோவை.

பொன்னியல் சுணங்கின் மென்முலை யரிவைக்கு
யின்னிவ ரொளிவே லண்ணல்
நின்னுறு விழுமங் கூறுமதி நீயே.

—பொருளியல்.

அறியேனென்றலென்பது, தோழி தலைமகனை நீ சொல்லுகின்றவளை நானறியேனெனச் சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

விண்ணிறந் தார்நிலம் விண்டவ ரென்றுமிக் காரிருவர்
கண்ணிறந் தார்தில்லை யம்பலத் தார்கழுக் குன்றினின்று
தண்ணறு[ந்தாதிவர் சந்தனச் சோலைப்] பந் தாடுகின்ரு
ரெண்ணிறந் தார்பலர் யார்கண்ண தோமன்ன நின்ன
[ருளே.

—திருக்கோவை - 107.

பொறிகெழு கெண்டைபொன் மால்[வரை
மேல்வைத்திப் பூமியெல்லா
நெறிகெழு செங்கோ னடாநெடு
மாறனெல் வேலிவென்ருன்
வெறிகமழ் பூங்கன்னிக் கானல்
விளையாட் டயர்கின்ற
செறிகுழ லார்பலர் யார்கண்ண
தோவண்ணல் சிந்தனையே]

—பாண்டிக்கோவை.

[குறியாள் கூறலென்பது......]
[நெறிநீ ரிருங்கழி நீலமுஞ் சூடாள்
பொறிமாண் வரியலவ ளூட்டலு மாட்டாள்]
[சிறு]நுதல் வேரரும்பச் சிந்தியா நின்ருட் [கோ.
கெறிநீர்த்தண் சேர்ப்பயா னென்சொல்லிச் செல்

—பழம்பாட்டு.

அலவ[ே]ளுட[ா]டலு மாடா...டு
மலர்ப்பூங் கானல் வண்டலு மயரா
ளோவியப் பாவை யொத்தனள்
யாதுகொ லண்ணல்யான் சொல்லு மாறே.

—பொருளியல்.

அரியளாமென............தலைமகளெமக்குப் பெரியள்; யாம் குற்றேவல்மகளிர்; ஆதலால் அவள் நமக்கரியளெனச் சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

புட்புலம் பும்புனற் பூலந்தைப் போரிடைப் பூழியர்கோ
னுட்புலம் போடுசெல் லச்செற்றவேந்த னுறந்தையன்னுள்
கட்புல மாச்செலுந் தெய்வங்கண் டாய்கமழ் பூச்சிலம்பா
வட்கில ளுகியெவ் வாறு மொழிவனிம் மாற்றங்களே.

—பாண்டிக்கோவை.

நெருநலு முன்னு ளெல்லையு மொருசிறைப்
புதுமை யாதலிற் கிளத்த ளுணி
நேரிறை வளைத்தோளுன் றோழி செய்த
வாருயிர் வருத்தங் களையா யோவென
வெற்குறை யுறுதி ராயிற் சொற்குறை
யெம்பதத் தெளியளோ மடந்தை
யின்ப வாழ்க்கைய ளிவண்மன் னெமக்கே.

—பொருளியல்.

குலமுறை கிளத்த லென்பது, தலைமகனை நீர் உயர்ந்த குலத்துள்ளீர் நுங்குலத்திற்கு ஆகோமெனத் தோழி சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

தெங்கின் பழங்கமு கின்குலை சாடிக் கதலிசெற்றுக்
கொங்கம் பழனத் தொளிர் கு[ளி]ர்நாட்டினை நீயுமைகூர்
பங்கம் பலவன் பரங்குன்றிற் குன்றன்ன மாபதைப்பச்
சிங்கந் திரிதரு சீறூர்ச் சிறுமியென் றேமொழியே.

—திருக்கோவை-100.

[ளநாட்
நடைமன்னு மென்றமை நீர்வந்து நண்ணல்நன் னீர்வ
டிடைமன்னு செல்வர் நுமரெமர் பாழி யிகல்விளைத்த
படைமன்னன் றெல்குல மாமதி போற்பனி முத்திலங்கு
குடைமன்னன் கோடியர் கொல்லியஞ்சாரற் குறவர்க்கே.

—பாண்டிக்கோவை.

இவளே, கான நண்ணிய காமர் சிறுகுடி
நீர்சிறப் பெருங்கடல் கலங்க வுள்புக்கு
மீனெறி பரதவர் மகளே நீயே
நெடுங்கொடி நுடங்கு நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வர் காதன் மகனே
நிணச்சுறு வறுத்த வுணங்கல் வேண்டி
யினப்புள் ளோப்பு மெமக்குநல னெவனோ
புலவு நாறுதுஞ் செலநின் றீமோ
பெருநீர் விளையுளெஞ் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவ[தோ] வன்றே
யெம்ம னோரிற் செம்மலு முடைத்தே.

—நற்றிணை-45.

நிலையிருங் குட்டத்தி னெடுந்திமி லியக்கி
வலையிற் றந்த வாடுமீ னுணங்கல்
விலையோ விலையென வேட்பக் கூறி
நெல்லொடு பெயரு நிரம்பா வாழ்க்கை
வேட்டக் கிளையொடு வினவுதி ரெனினே
பூட்டுவிற் புரையும் புருவவாண் முகத்துப்
பிறைகிடந் தன்ன நுதலிவ
ளிறைவளைப் பணைத்தோ ளெய்தலோ வரிதே.

—சிற்றெட்டகம்.

திருந்தா வாழ்க்கைச் சிறுகுடி யெமக்குப்
பெருந்தகை யண்ண லி(?னி)ன்ன(?னி)டை
பொருந்திய கேண்மையும் புரைவதோ[வன்றே.]

—பொருளியல்.

சேரி வலைஞர் திறைகொணர்ந்த மீனுணங்கல்
மூரி வலையுணங்கு முன்றில்வாய்—நீரெங்கள்
தேங்கோதை தோள்சேரச் சேருமோ சேர்ப்பரே
[பூங்கோதை] யோடும் புலால்.

—[... ...]

புதிய நறுங்குவளைப் பூமுடிப்பார் கானல்
முதியனவு முண்டகப்பூ மோவா—ரதிகன்
றலைக்குலத்தீர் நீர்நாங்கள் தாழ்குலத் தோமுந்
... ...

—[... ...]

[நகைத்துரையாடல் என்பது ...]

... ...
... ...ருகணையா வீடுவிப்பா—கேழல்
தசையுடைத்த வம்பினொடும் போந்ததே சால
விசையுடைத்து நீர்பிடித்த வில்.

—பழம்பாட்டு.

[தழை மறுத்து]ரைத்த லென்பது தலைமகன் கையுறைகொணர்ந்த தழையை யிவ்விடத் துள்ளதன்றெனச் சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

எழில்வா யிளவஞ்சி யும்விரும் பும்மற் றிறைகுறையுண்
டழல்வா யவிரொளி யம்பலத் தாடுமெஞ் சோதியந் தீங்
குழல்வாய் மொழிமங்கை பங்கன்குற் றாலத்துக் கோலப்
[பிண்டிப்
பொழில்வாய் தடவரை வாயல்ல தில்லையிப் பூந்தழையே.

—திருக்கோவை-94.

வேனக நீண்டகண் ணாளும்
விரும்புஞ் சுரும்பரற் றூர்
தேனக விண்டவண் டார்கண்ணி
யாய்சிறி துண்டுதெவ்வர்
வானக மேறவல் லத்துவென்
றான்கொல்லி மால்வரைவாய்க்
கானக வாணருங் கண்டறி
யாரிக் கமழ்தழையே.

—பாண்டிக்கோவை.

மாணெழி லண்ணல் வாங்கலம் யாமெஞ்
சேணுயர் சிலம்பின் யாங்கணுங்
காணல மன்னோவிக் கமழ்பூந் தழையே.

—பொருளியல்.

குறிப்பறிந்தேற்ற லென்பது எம்பெருமாட்டி குறிப்பறிந்தல்லது இத் தழை கொள்ளேமெனச் சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

யாழார் மொழிமங்கை பங்கத்
திறைவ னெறிதிரைநீ
ரேழா யெழுபொழி லாயிருந்
தோனிறை தில்லையன்ன
சூழார் குழலெழத் தொண்டைச்செவ்
வாய்நவ்வி சொல்லறிந்தாற்
றூழா தெதிர்வந்து கோ(ண்)டுஞ்
சிலம்ப தருந்தழையே.

—திருக்கோவை-93.

துடியா ரிடைவடி வேற்கண்
மடந்தைதன் சொல்லறிந்தாற்
கடியார் கமழ்கண்ணி யாய்கொள்வல்
யான்களத் தாரில்வென்ற
வடிவா ரிலங்கிலை வேன்மன்னன்
வானே றணிந்தவென்றிக்
கொடியான் மழைவளர் கொல்லியஞ்
சாரலிற் கொய்தழையே.

—பாண்டிக்கோவை.

மாமலைச் சிலம்ப மயிலேர் சாயற்
றேமொழி நிலைமை தெரிந்தபின்
பூமென் றண்டழை கொள்குவன் புரிந்தே.

— பொருளியல்.

மடற்றிறங் கூற லென்பது தோழி தழைமறுப்பதற்கு ஆற்றானுகிய தலைமகன் சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து
வீசின போதுள்ள மீனிழந் தார்வியன் றென்புலியூ
ரீசன சாந்து மெருக்கு மணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்சின மாவென வேறுவர் சீறூர்ப் பனைமடலே.

—திருக்கோவை-74.

படலே றியமதில் மூன்றுடைப்
பஞ்சவன் பாழிவென்ற
வடலே றயின்மன்னன் றெம்முனை
போன்மெலிந் தாடவர்கள்
கடலே றியகழி காமம்
பெருகிக் கரும்பனையின்
மடலே றுவர்மற்றுஞ் செய்யா
தனவில்லை மாநிலத்தே.

—பாண்டிக்கோவை.

மாவென மடலு மூருப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே.

—குறுந்தொகை . 17.

... ...
கொண்டதோர் காதற் குணமுடியாக் கொள்கைத்தேற்
குண்டுநீர் வேலைக் குவலயத்தோர்—வண்டின்
கணங்காட்டுங் கூந்தலாய் ... ...
மணங்காட்டுங் காந்தள் மலர்.

—அகத்திணை.

மங்கையர்தங் கண்ணால் மயங்கினூர் வெள்ளெலும்புந்
துங்க வெருக்குந் தொடுத்தணிந்—தங்க[மெலாம்]
[வெந்தேறு]சாம்பல் மிகவணிந்து வீதிதொறும்
வந்தேறி யூர்வர் மடல்.

—தினவித்தெளிவு.

* * *

['துறையுறுங் கிழவனை யுணர்ந்த தோழி
சிறையுறக் கிளந்து சேட்பட] நிறுத்தலு
மென்னை மறைத்த லேவறு கியரென
முன்னுறு புணர்ச்சி முறைமுறை செப்பலு
மாயப் புணர்ச்சி யவனொடு நகாஅ
நீயே சென்று கூறென [விடுத்தலு]
மறிமாள் போறலுங் குறியாள் கூறலும்
படைத்துமொழி கிளவியுங் குறிப்புவேறு கோளலு
மன்ன பிறவுந் தலைப்பெயல் வேட்கை
முன்னுறு புணர்ச்சிக்[குரிய வே]ன்ப.' —இறை-12.

என்னுஞ் சூத்திரத்துள்ளும்

'முன்னுற வுணரினு மவன்குறை யுற்ற
பின்ன ரல்லது கிளவி தோன்றது' —இறை-9.

என்னுஞ் சூத்திரத்துள்ளுங் கண்டுகொள்க.

மடல் வெளிப்படுத்த லென்பது இவ்வகை யுலகினி...

* * *

குறிப்பறிவுறுத்த லென்பது தானறிந்தபடியைத் தலைமகட்குப் புலனுகாமை மறைத்துத் தலைமகளுழைச் சென்று சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

வரிசேர் தடங்கண்ணி மம்மர்கைம்
மிக்கென்ன மாயங்கொலோ
வெரிசேர் தளிரன்ன மேனிய
ளீர்ந்தழை யன்புலியூர்ப்
புரிசேர் சடையோன் புதல்வன்கொல்
பூங்கணை வேள்கொலென்னத்
தெரியே முரையான் பிரியா
னொருவனித் தேம்புனமே.

—திருக்கோவை-83.

கொடியார் நெடுமதிற் கோட்டாற்
றரண்கொண்ட [கோன்பொதியிற்]
கடியார் புனத்தயல் வைகலுங்
காண்பன் கருத்துரையா
னடியார் கழல னலங்கலங்
கண்ணியன் மண்ணளந்த
நெடியான் சிறுவன் கொலோவறி
யேனோர் நெடுந்தகையே.

—பாண்டிக்கோவை.

வண்டுளர் பூந்தார் வளங்கெழு செம்பூட்சேய்
வடிவே போலத்
தண்டளிர்ப் பிண்டித் தழையேந்தி மாவினவித்
தணந்தோன் யாரே
தண்டளிர்ப் பிண்டித்
தழையேந்தி வந்துநம்
பண்டைப் பதிவினவிப் பாங்கு பட[மொழிந்து
படர்ந்]தோ னன்றே.

—பழம்பாட்டு.

கைதை வேலிக் க்ழிவாய் வந்தெம்
பொய்த லழித்துப் போனு ரொருவர்
பொய்த லழித்துப் போனு ரவர்நம்
மையன் மனம்விட் டகல்வா ரல்லர்.

—சிலப்பதிகாரம் - கானல்-43

கானல் வேலிக் கழிவாய் வந்து
நீநல் கென்றே நின்ரு ரொருவர்
நீநல் கென்றே நின்ரு ரவர்நம்
மானேர் நோக்க மறந்தா ரல்லர்.

— ஷை 44.

அன்னந் துணையோ டாடக் கண்டு
நென்ன னோக்கி நின்ரு ரொருவர்
நின்ரு ரவர்நம் நெடுங்கண் விட்டுப்
பொன்ரும் சுணங்கிற் போவா ரல்லர்.

— ஷை 45.

[செம்ம] லொருவன் செறிபூந் தழையேந்தி
மம்மர் பெருகி வனப்பழித்து — நம்முடைய
நன்பூம் புனமகலான் நாமதற்குச் செய்வதுமற்
றென்பூங் குழலா [யியம்பு.]

— கிளவித்தெளிவு.

வலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தலென்பதுஎன்னையும் நோக்கி யலவனையும் நோக்கித் தம்முணர்வொழியப் போனரொரு......ரெனச் சொல்லுதல்.

அதற்குச் செய்யுள்:—

'நீகண் டனையெனின் வாழலை நேரிழை யம்பலத்தோன் [பெடையை
சேய்கண் டனையன்சென் றங்கோ ரலவன்றன் சீர்ப்
வாய்வண் டனையதொர் நாவற் கனிநனி நல்கக்கண்டு
பேய்கண் டனையதொன் றுகினின் றுனப் பெருந்தகையே.

— திருக்கோவை - 84

பாடுஞ் சிறைவண் டறைபொழிற் பாழிப்பற் றுவரச
ரோடுந் திறங்கண்டகோன்கொல்லிக் கானலுறுதுணையோ
டாடு மலவற் புகழ்ந்தென்னை நோக்கி யறிவொழிய
நீடுநினைந்துசென் றுனென்ன லாங்கோர் நெடுந்தகையே.

—பாண்டிக்கோவை.

* * *

['உள்ளத் துணர்ச்சி தெள்ளிதிற் கரந்து
கிழ]வோ டேளத்துக் குறையுறூஉ முளவே
குறிப்பறி வுறூஉங் காலை யான்' —இறை-10

என்னுஞ் சூத்திரத்துட் கண்டுகொள்க.

ஆண்டாள்

3. கோதையார் யௌவனமும் அவர் அநுபவமும்

[826-வது பக்கத் தொடர்ச்சி]

3. கோதையார் குடும்ப நிலைமை

கோதையார் குடும்ப நிலைமையைக் கூறப் புகுமுன்னர், கோதையாருக்கு யாதேனும் குடும்பந்தானுண்டோவென்னும் சங்கை யெழும். அவ்வினாவுக்குப் புராண வரலாறுகளை ஆதாரவாகக்கொண்டு விடை பகர்வோமெனில், "பெரியாழ்வாரென்பர் ஒரு ஏழைப் பிராமணர்; ஸ்ரீ வில்லிப்புத்தூரில் வடபெருங் கோயிலுடையான் திருப்பணியா லருள்பெற்றுப் பாண்டியன் கொண்டாட வேதங்களின் மர்மங்களை வெளியிட்டுப் பொற்கிழியைப் பெற்றார். ஆயினும் அவர் பிரமசரிய சன்னியாசி; இவர் அருளிற் சிறந்தவரன்றிப் பொருளிற் சிறந்தவரல்லர்" என்று நாம் மொழிவோமன்றோ? கோதையாரின் திருப்பாடல்களிலுள்ள அகச்சான்றுகளை யுற்றுநோக்கின் அவர் பிரமசரியம் பூண்டிருப்பினும், அகத்துறவியா யிருப்பினும், ஒரு சிற்றரசனுக்குச் சமானமான அந்தஸ்தைப் பெற்றிருந்தவரென்பதற்கு யாதொரு ஐயுறவில்லை. அவற்றில் சில காண்போம்.

கோதையார் தன் தந்தையைத் தனது திருமொழிகளின் திருக்கடைக்காப்புச் செய்யுட்களில் குறிப்பிட்டுரைக்கும் சொற்றொடர்களாவன: "புதுவையர்கோன் விஷ்ணுசித்தன்", "வில்லிப்புத்தூர் மன் விஷ்ணுசித்தன்", "புதுவை மன்னன்", "பட்டர்பிரான்", "வேயர் புகழ் வில்லிப்புத்தூர் கோன்", "வில்லிப்புதுவை நகர் நம்பி விஷ்ணுசித்தன்" என்பனவன்றித் திருப்பாவை 30-வது செய்யுளில் "பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான்" என்றுந் திருவாய்மலர்ந்தருளியதால், அவர் தந்தை ஸ்ரீ வில்லிப்புத்தூரில் தனவந்தராக வாழ்ந்தனரென்பது சந்தேகம் யாதுமின்றிப் புலப்படுகின்றது. பாண்டியன் தந்த பொற்கிழியைப் பெற்றபிறகு செல்வத்திற்சிறந்தனரோ என்பது பின்னர் அறிஞர் ஆராய்ச்சிக்கு விடப்பட்டது. எவ்விதமாயினும் சரி, ஆண்டாள் சிறுவயது தொடங்கிப் பட்டர்பிரான் ஏழைப் பிராமணனாயிராமல் புதுவையில் ஒரு மன்னனாக விளங்கினரென்பது திண்ணம் *. பெரியாழ்வார் பிரமசாரியாய் அகத்துறவுபூண்ட சந்நியாசி யெனினும் அவர் ஒரு தனியாளாக ஸ்ரீ வில்லிப்புத்தூரில் வசித்தாரென்பதற்கு ஆண்டாள் திருப்பதிகங்கள் இடங்கொடுக்கவில்லை. மாமன் மகளும் அத்தையும் மாமியும் முதலான பலவித பந்துக்களை ஆண்டாள் பெற்றிருந்ததுந் தெரிகின்றது. இவரது குழவிப்பருவத்தில் அடிசில் ஊட்டும்போது தாதிகளுக்குக்கொடுத்த துன்பத்தால் அவர்கள் இவ்வம்மையாரைக் காட்டின்பக்கம் எடுத்துச் சென்று சிங்கம்வருமெனப் பயப்படுத்திச் சோறூட்டினார்போலும் என முன்னரே குறித்தோம். இவ்வம்மையார் நீராடப்போகும்போதும் வேறு எதற்காக வெளியிற் சென்றாலும் பல மகளிருடன் சேர்ந்து செல்வது வழக்க மென்பதையே திருப்பாவையிலுள்ள ஒவ்வொருசெய்யுளும் உணர்த்துகின்றது.

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் கோதுகலமுடைய
பாவாய் எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

திருப்பாவை 8.

இதனால் இவ்வம்மையார் ஒரு பெரிய குடும்பத்தினிடையே யிருந்தாற்போல் தோன்றுகின்றதேயன்றி ஒன்றியாய்த் தன்னந்தனி பிராமணன் வளர்த்த குலமற்ற பெண்போல் காணப்படவில்லை.

பெரியாழ்வார் மிக்கசெல்வமுடையரென்பது முன்னரேகண்டோம். இவ்வம்மையார் செல்வாக்கு அதனினும் அதிகமாயிருந்ததென்பது திண்ணம்.

உருவுடையா ரிளையார்கள் நல்லார்
ஓத்துவல் லார்களைக் கொண்டு வைகல்
தெருவிடை யெதிர்கொண்டு பங்குனிநாள்
திருந்தவே நோற்கின்றேன் காமதேவா!

என்றது எவ்வளவு செல்வத்தின் உரத்தால் விளைந்திருக்க வேண்டுமென்பதை அநுமானிக்கலாம்.

* நல்லவென் தோழி நாகணை மிசைநம்பரர்
செல்வர் பெரியர் சிறுமானிடவர் செய்வதென்
வில்லிப்புதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை
வல்ல பரிசு வருவிப்பரேல் அதுகாண்டுமே.
10-வது திருமொழி 10.

"ஜனக்கட்டு" "பணக்கட்டு" என்னும் இருவகைச் சீர்களும்பெற்ற ஆண்டாள் குடும்பமானது ஈகைத்தன்மையிற் சிறந்ததாயிருந்தது. ஞானவானான பெரியாழ்வாரது இல்லம் தருமசாலையாயிருக்குமென மொழிவதற்கு அநுமானப் பிராமணமே போதுமாயினும், ஆண்டாள் திருவாக்கான அகச்சான்று பிரத்தியட்சிய சாட்சியமன்றோ? நந்தகோபாலனை ஒரு வள்ளலெனக் குறித்துப் பாடியது, தன்னில்லத்து நடத்தும் அன்னதானச் சிறப்பை உருவகப்படுத்தின தென்னலாம்:—

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோ பாலா எழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே
எம்பெரு மாட்டி யசோதாய் அறிவுறாய்
அம்பர மூடறுத் தோங்கி யுலகளந்த
உம்பர் கோமானே யுறங்கா தெழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா
உம்பியும் நீயு முறங்கேலோ ரெம்பாவாய்.

திருப்பாவை. 17.

இவ்வாறு தருமசீலனாய் விளங்கிய பட்டர் திருமாளிகையில் அவர் திருமகள் "பைங்கமலத் தண் தெரியல்" என உலாவி வந்தனரென்றும், அவரைப் புடைசூழ்ந்த திங்கள்திருமுகத்துச் சேயிழையார் பலர்ஏவலாளராயிருந்தனரென்பதும், இவ்வம்மையார் சொற்றொடர்களின் நிலையால் அநுமானிப்பது தகும்.

இஃதன்றியும் பெரியாழ்வார் பாடல்களாலும் அவர் நிலைமையைக் காணலாம். "மச்சணிமாடப் புதுவையோன் பட்டன்" என்றதால் இவர் வசித்த வீடு மெத்தைவீடு என்பதும், அது வில்லிப்புத்தூரில் சிறந்த மாளிகையென்பதும் நிச்சயம். இக்குடும்பமும் புராதன குடும்பமென்பதும் திண்ணம். விஷ்ணுசித்தர் தன்னைக் குறிக்குமிடத்துப் "பாரணிந்ததொல்புகழான் பட்டர்பிரான்" என்றதுபோல் இவ் வம்மையாரும் "வண்புதுவை ஏய்ந்தபுகழ்ப் பட்டர்பிரான் கோதை" என்றார்.

4. கோதையார் திருப்பணி.

கோதையார் செய்த திருப்பணி யாது என்று வினவின், அவர் தந்தையின் திருப்பணியாகிய வனமாலை கைங்கிரியமென்று மொழியலாம். 18-வது திருமொழியில், கண்ணனென்னுங் கருந்தெய்வக் காட்சியில் பழகிக் கிடக்குமிவர் திருத்துழாய் மாலையையே மிகவும் வற்புறுத்திப் பாடுவதைக் காண்க. திருத்துழாய்மாலை கோவிந்தனுக்குச் சிறந்ததேனும், பற்பல தேன்மலர்க் கண்ணிகளைச் சமர்ப்பிப்பதிலும் தன் தொண்டினைப் புரிந்தாரென்பது இவ்வம்மையார் 9-வது திருமொழியாகிய திருமாலிருஞ்சோலைப்பெருமானைவழிப்பட்டவாற்றால் அநுமானிக்கலாம்.

எழிலுடைய வம்மானீர் என்னரங்கத் தின்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்
எழுகமலப் பூவழகர் எம்மானார் என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வளையே யாக்கினரே

11-வது திருமொழி 2.

மாயனை அர்ச்சாவதார மூர்த்தங்களில் அலங்கரித்துக் கண்டு சேவித்து நிற்பது இவருடைய ஒருவகைத் திருப்பணியா யிருப்பினும், கடவுள் திருவுள்ளத்தைக் கண்டு உலகில் செய்வது யாதென்பது தெரிந்து அதன் வழி நிற்றலே இவருக்குப் பெருந்தொண்டா யிருந்தது. இதைத் திருப்பாவையில் சாற்றுப்பாட்டான 29-வது செய்யுளில் ஒரு போக்காக விளக்குவதைக் காண்க :—

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்ற மேயத் துண்ணுங் குலத்திற் பிறந்துநீ
குற்றே வலேங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வான் நன்றுகாண் கோவிந்தா
என்றைக்கும் ஏழேழ் பிறவிக்கு முன்றன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநா மாட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்"

என்றதில் "பொற்றாமரை யடியைப் போற்றும்" கருத்து இஃதென்னவிளக்குகின்றார். இத்தகைய நிஷ்காமிய தவம் உலகத்தில் பரவவைப்பதே, இவர் பெருந்தொழிலாயிருந்தது. பெருமானுடைய திருவுருவம் கண்டறிவது மிகவும் கடினமாதலால் "அல்லல் விளைத்த பெருமானை ஆயர்பாடி அணிவிளக்கை" யென்று கண்ணனைக் குறிப்பிடுவது காண்க. எவ்வெத்துறைகளில், மாயைவலைக்குத் தப்பி யுழைத்தால் பயன் பெறக்கூடுமென்பது குறிப்பிடும் வண்ணம் 14-வது திருமொழியில் இவர் வார்த்தைகளை மருந்தாயெடுத்து வாழ்வோர்களுக்குச் சில வினாக்கள் கூறி விடையும் பகர்வது காண்க.

மாதவன்என் மணியினை வலையிற்பிழைத்த பன்றிபோல்
ஏதுமொன்றுங் கொளத்தாரா ஈசன்தன்னைக் கண்டீரோ [போல்
பீதகவாடை யுடைதாழப் பெருங்கார்மேகக் கன்றே
வீதியார வருவானை விருந்தா வனத்தே கண்டோமே.

14-வது திருமொழி 5.

இவ்வாறு ஈசனைத் தேடுந் தொழிலிலிருப்பதும், மற்றவரை அத்தொழிலி லமர்த்தலும்இவருடைய பெரிய திருப்பணியா யிருந்ததென்னலாம்.

ஆறெழுத்தந்தாதி :—அகத்திய முனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி என்னும் இந்நூல், முருகக்கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனைசெய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்திய முனிவரே பாடியதெனக் கருதப்படுவது. நூறு செய்யுள்கள் இந்நூலில் உள. பாராயணத்திற்குரியது. Dr. V. S. அருணசலம்பிள்ளை அவர்கள் இயற்றிய பதவுரை விளக்கம் முதலியனவைகளைக் கொண்டது. விலை அணா 12. தபால் சார்ஜ் வேறு.

ஏமாங்கதத்திளவரசன் :—இது ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயரால் எழுதப்பட்ட நாவல்நூல். இலக்கியநயம் இலங்கும் இக்காதற்கதை படிப்பவரைக் கவரும் தன்மையது. விலை ரூ. 1. தபால் சார்ஜ் வேறு.

கலா நிலயம், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்—9. பள்ளிபடைப் படலம்.

[830-வது பக்கத் தொடர்ச்சி]

முதலினிற் பெற்ற மேன்மை முடிவினிற் சிறந்த தம்மா.

பன்னரும் பாவியென்னக் கைகேசியைக் கைவிதிர்த்

தகன்ற பரதன் கோசலையின்பா லெய்தி யவள் கமலச் சீறடி பூண்டு,

எந்தையெவ் வுலகுளா னெம்முன் யாண்டையான்
வந்தது தமியெனிம் மறுக்கங் காணவோ
சிந்தையி னுறுதுயர் தீர்த்தி ராலெனு
மந்தரத் தமரரு மழுது சோரவே

[என் தந்தை எவ்வுலகத்தி லிருக்கின்றான். என் அண்ணன் எங்கே யிருக்கின்றான். நான் வந்தது தமியனாகி இக் கலக்கத்தைக் காணவோ. என் நெஞ்சிலுள்ள இந்தத்துயரத்தைத் தீருங்கள், என்றென்று வானத்திலுள்ள தேவர்களும் இவன் நிலைகண்டு அழுது சோரும்படி, புலம்பினான்.]

இருவரும் சென்றவிடம் பரதனுக்குத் தெரியுமாதலின் இது அறியாவினா வன்று. துயரத்தின்மிகுதியால் அவசமுற்று இன்னணம் வினவினானென்பதைச் 'சிந்தையி னுறுதுயர் தீர்த்திர்' என வேண்டியமொழிகளை விளம்புகின்றன. பின்னரும்,

அடித்தலங் கண்டிலென் யானெ னையனைப்
படித்தலங் காவலன் பெயரற் பாலனே
பிடித்திலிர் போலுநீர் பிழைத்தி ராலெனும்
பொடித்தலந் தோளுறப் புரண்டு சோர்கின்றான்

[தோளிற் புழுதிபடும்படி தரையிற் புரண்டு தளர்பவனாகிய பரதன், என் தமையனது பாதங்களைக் காண்கிலேன். அரசன் இம்பூமியை விட்டுப் போகக்கூடியவனே. அவர் தமைப் போகவிடாமல் தடுத்து நிறுத்திக்கொள்ளவில்லையோ நீர், அல்லது பிடித்தும் அவர் கழன்று சென்றனரோ, எனப் புலம்பினான்.]

பிரிவோரை விலக்காமல் பார்த்திருந்தீரோ - நீர் பிழைத்தீரோ, அவர் பிழைத்தாரோ, என்பதெல்லாம் மறுகுறும் இரக்கத்தால் விளைந்தனவேயன்றி ஏசிச் சொன்ன இயற்கையவல்ல. இதனிடையில் பரதனது குணமும் கோபமும் தம்முள் போராடுகின்றன.

கொடியவர் யாவரும் குலங்கள் வேரற
நொடிகிலர் யானது நுவல்வ தெங்ஙனம்
கடியவள் வயிற்றினிற் பிறந்த கள்வனேன்
முடிகுவ னருந்துயர் முடிய வென்னுமால்

[இவ்வுலகிலுள்ள கொடியவர்களெல்லாரும் குலத்தோடும் நிர்மூல மாகவில்லை. நான் அவர்களைச்சபித்து அழித்துவிடலா மென்றாலோ அது தக்கதன்று. ஆதலால், கொடியவளாகிய கைகேசியின் வயிற்றிற் பிறந்த கள்வனான நான், என் அரும்துயர் முடியும்வண்ணம் மாள்வேன், என்றான்]

தீயவராயினோ ரெலாம் எனினுந் தொலைந்திலர் என்று, கைசேசி யொருத்தியைப் பற்றிக் கொடியவரெல்லோரையும் வேற வெறுத்த பரதன் வெகுளியின் மிகுதியால் அத்துணை பேரையும் ஒருங்கே சபித்தழிக்கத் தலைப்பட்டானாலும், குணமென்னும் குன்றேறி நின்றார் தம் வெகுளியைக் கணமேனும் காத்தலரிதாதலின், "யான் அது நுவல்வது எங்ஙனம்" எனத் தீர்ந்து, தான் மாய்வதே தக்கதெனத் தேர்கின்றான். எனினும், தான் மாய்வதால் ஒருகால் தன்னது கடுந்துயர் முடியலாம், மற்றுத் தன்னால் தன் குலத்திற் குற்ற குறை தீருமாறில்லை எனச் சோர்வானாகி,

இரதமொன் றூர்ந்துபா ரிருளை நீக்குமவ்
வரதனி லொளிபெற மலர்ந்த தொல்குலம்
பரதனென் றொருபழி படைத்த தென்னுமால்
மரகத மலையென வளர்ந்த தோளினான்

[மரகத மலைபோல் வளர்ந்த தோள்களையுடைய பரதன், "இரதத்தில் ஏறிவந்து இருளை நீக்குகின்ற சூரியனிலிருந்து புகழுடன் விளங்கிய இப்பழமையான குலம், பரதன் என்ற ஒரு பழியையும் பெற்றதே", என்று ஏங்கினான்]

இனித் தன்குல முற்ற பழியோடு குடிகளுற்ற இடரையுங் கருதி,

வாளொடு தானையான் வானில் வைகிடக்
காடொரு தலைமக னெய்தக் கண்ணிலா
நாடொரு துயரிடை நைவ தேயெனுந்
தாளொடு தடக்கையத் தரும மேயனான்

[முழந்தாளளவு எட்டுகின்ற கைகளையுடைய தருமமே போன்றவனாகிய பரதன், வாளை ஏந்திய படைஞரையுடைய தயரதன் வானுலகு சேரவும், அவன் ஒப்பற்ற முதற் புதல்வன் கானகம் சேரவும், இதனால் இருகண்களையும் இழந்ததுபோல் இந்நாடு மிக வருந்தும்படி ஆயிற்றே, என்று பரிவுகூர்ந்தான்]

பெருந்தகைப் பரதன் கோசலையின் உரைத்த சொற்கள் இவை. தந்தையுந் தன்முனும் சென்று சேர்ந்தவிடமும் அன்னதற்குத் தன்னையீன்றவக் கடியவள் காரணமாய பரிசினையும் அறியாதா னல்லன். கோசலை தடுக்காது பிழைத்தாளென்பதும் வருத்தங் கைம்மிக உரிமையோ டுரைத்ததன்றி யவளைக் கடிந்துரைத்த தன்றென்பது வெளிப்படை. 'எந்தை எவ்வுலகுளான், எம்முன் யாண்டையான்,' என்று முதலில் வினவினானாயினும் பிறகு அவனே, வானும் கானும் அவர் போயினர் என்பதைப் பகர்ந்தானாதலின், கோசலை அதற்கோர் விடை யியம்பவேண்டா. 'கடியவள் வயிற்றிற் பிறந்த கள்வன்' எனத் தன்னை இழித்துக்கொண்ட போது, கைகேசியால் இவை நிகழ்ந்தன வென்பதைப் பரதன் அறிந்திருப்பதும் வெளிப்பட்டது. இராமனிலும் நல்லன் நிறைகுணத்தவன் என்று இப்பரதனை மதித்திருந்த கோசலைக்கு, அவன் கைகேசியின் சூழ்ச்சியில் கலந்திரான் என்பது முக்காலத்திலும் நிச்சயம். ஆதலின் அதுபற்றி இப்பொழுது ஐயிர்த்தும் இலள். எனினும், தன்முயற்சி யில்லாவிடத்தும் தனதன்னை பூட்டிய அரசினை ஏற்பானோ அல்லனோ என்பதை அவள் தெளியுமாறில்லை. இச்செவ்வியில், "கண்ணிலா நாடொரு துயரிடை நைவதே" எனப் பகர்தலும், மன்னன் மாய்ந்ததும் முன்னவன்சென்றதுமன்றி அரசுந் தனதாய பரிசுந் தேர்ந்திலன் கொல்லோ என்னுமைய மவளெய்துதல் இயற்கையே. அரசினைப்பரதன் ஆளவேமாட்டான் என்பதில் அவளுக்கு எக்காலத்திலும் எள்ளளவுஞ் சந்தேகமிருந்ததில்லை. மற்று, தனக்குரிமை யுளதென்ப தோர்ந்தோ ராமலேயோ, கண்ணிலா நாடொரு துயரிடை நைவதெனச் சாற்றுமாற்றால், தான் அக்கண்ணுருங் கருத்தில னாதலைத் தெரி

வித்தான் என்பதொன்றே தெரிதல் வேண்டும். ஆதலின்,

மையறு மனத்தொரு மாசு ளானலன்
செய்யனே யென்பது தேருஞ் சிந்தையாள்
கைகயர் கோன்மக ளிழைத்த கைதவ
மையநீ யறிந்திலை போலு மாலென்றாள்

[இயற்கையாகவே களங்கமற்ற இவன் மனத்தில் இப்பொழுதுங் குற்றமொன்றுங் கொண்டதில்லை என்பதைத் தேர்ந்த நினைவினளாகிய கோசலை, "ஐயனே, கேகயராஜன் புத்திரி செய்த வஞ்சனையை நீ அறியவில்லைபோலும்," என்றனள்]

இங்கு, 'அறிந்திலை போலுமால்' என்பதற்கும் அங்கு வான்மீகத்தில், "இராச்சியத்தில் ஆசையுள்ள உன்னால் பகையற்ற இராச்சியம் அடையப்பட்டது" என்பதற்கும், உரையளவில் மாத்திரமன்றிக் கருத்தளவிலும் யாதுந் தொடர்பில்லை. இவ்விரு பெரும் நூல்களிலும் பரதன் அருஞ் சூள்கள் பகர்கின்றதினின்று இந் நூலிலும், கோசலை கூறிய மொழிகளில் கொடுமை காண்பது நேரிதன்று. வான்மீகத்தினின்று இதனை வேறுபடுத்தி வற்புறுத்துவதற்கே இதற்கு முன்செய்யுளில் கம்பர்,

புலம்புறு குரிசிறன் புலர்வு நோக்கினாள்
குலம்பொறை கற்பிவை சுமந்த கோசலை
நிலம்பொறை யாற்றலை னெஞ்சந் தூய்தெனாச்
சலம்பிறி துறமனந் தளர்ந்து கூறுவாள்

[குலம் பொறுமை கற்பு என்னுமிவைகளைத் தாங்கிய கோசலை, புலம்புகின்ற பரதனது வாட்டத்தைக் கண்டு, இவன் அரசுதாங்கமாட்டான், இவன் நெஞ்சம் தூயது என்றுணர்ந்து, தான் மனந்தளர்ந்திருப்பாளாயினும் அவன் சஞ்சலத்தை மாற்றும்படி பின்வருமாறு கூறினாள்]

எனச் செப்பிவைக்கலாயினர். ஆதலின், "கைதவம் ஐயநீ அறிந்திலை போலுமால்" என்பது, "ஐயோ பாவம், அவள் வஞ்சனை முழுவதையும் நீயின்னும் அறியவில்லை என்று தெரிகின்றது" எனப் பொருள் படுமேயன்றி "அவள்வஞ்சனையை அறியாதவன்போல் நீயேன் இந்தக் கபடநாடகம் நடிக்கின்றாய்" என இங்குப் பொருள்கொள இயையாது. ஆல் என்னும் அசை இங்கு இரக்கக்குறிப்புடையது. எனினும் தன்னை வந்தெய்தியுள பழியினை நினைத்துநினைத்துக் கூசிய பரதன் கோசலையின் இப் பரிவுமொழிகளுக்கும் சால அலசினான். வெடித்த மலையினின்று வெந்தீயெழுதல்போல் உடைந்த அவன் மனத்தினின்று கடியசூள்கள் பொங்கலாயின.

தாங்கருந் துயரத்தால் தளர்ந்த சிந்தையனாகிய பரதன் கைகேயியின் கொடிய செய்கைக்குத் தான் உடந்தையல்லன் என்பதை வற்புறுத்தற்குப் பற்பல பன்னிக் கட்டுரைத்த சபதங்கள் ஐம்பதிற்கு மேற்படும். "தீயன கொடியவள் செய்த செய்கையை நாயினேன் உணரின், இன்னோரன்னவர் வீழும் நகரத்தில் யான் வீழ்க" என்னும் முறையில் அமைந்துள அச்சூள்கள். அறம்கெட முயன்றவன், அருளிலா நெஞ்சினன், இரப்பதற்கேனும் அறம்பார்த்துக் கவர்வதற்கேனும் பிறன்வாயிலில் நின்றவன், மற்றவரைக் கோபிப்பவன், உயிர்க்கொலை புரிந்து வாழ்பவன், மாதவர்க்குத் துயர் செய்தவன், பெண்கொலை செய்தவன், அரசனுக்குதவியாய்ப் போர்முகஞ்சென்று பின் பகைவருக்கு முதுகுகாட்டித் திரும்பினவன், இரவலர் பொருளைக் கொள்ளைகொண்டவன், திருமாலே முதல்வன் அல்லனென மறுத்தவன், அந்தணருக்குப் பிழைசெய்தவன், வேதங்கள் அநாதி என்பதை ஒவ்வாது இவை பின்னவர்களால் செய்திருக்க வேண்டுமெனும் மடயன், தாய் பசித்திருக்கத் தானுண்டவன், தலைவன் உயிரிழக்கக் கைவிட்டுப் போனவன், தனக்குத் தீங்குவருமென்று அஞ்சிச் சரண்புகுந்தவர்களை அவர் பகைவர்கைகளில் கொடுத்துவிட்டவன், அறத்தை மறந்தவன், பொய்க்கரி சொன்னவன், போருக்குப் பயந்தவன், அடைக்கலப்பொருளை அபகரித்துக்கொண்டவன், மெலிந்தோரை நலிந்தவன், அந்தணர் ஆசிரமத்திற்குத் தீவைத்தவன், மைந்தரைக் கொன்றவன், வழக்கில் பொய் சொன்னவன், தெய்வநிந்தனை செய்தவன், கன்று உயிர்சோர்ந்து மாயும்படி தாய்ப்பசுவின் பாலைக் கரந்துகொண்டவன், நீதிமன்றத்தில் உண்மையை மறைத்துப் பிறர்பொருளை வவ்வினவன், நன்றியை மறந்து நயமில்லாமற் பேசுபவன், தன்னுடன் வழிவரும் மாதரைக் கள்வர் எதிர்க்கத் தான் ஓடிப் பிழைத்தவன், பிறர் பசிக்கத் தானுண்டவன், போர்க்களத்தில் பகைவரைப் பணிந்து உயிர் வளர்த்தவன், அறிநெறியாலன்றிப் பொருள் வெஃகிய மன்னவன், தருமத்தை மறந்து சிறுதொழில் இயற்றிப் பழிபட அரசாட்சி செலுத்தினவன், பகைவர் பொரவருங்கால் தன் குடிகளைக் காப்பதற்கஞ்சிய அரசன், கன்னியை அழிக்கக் கருதினவன், குருபன்னியை நோக்கினவன், கள் குடிப்பவன், கள்வன், உண்ணத் தகாதனவற்றை நாய்போல் உண்டவன், நாணமில்லாதவன், நரகம் உண்டென்னும் நல்லுரையைப் பேணாதவன், பிறர் பழிகளைப் பிதற்றினவன், மறுவற்ற தொல்குலங்களுக்கு மாசு கூறினவன், பஞ்சகாலத்தில் எளியவர் உணவைச் சிந்தினவன், அயலவர் நாவில் நீர்வரத் தான் சுவையுடையவைகளை உண்டவன், கொடுக்கவும் கொடுக்காது மறுக்கவும் மறுக்காது ஏற்றவரைப் பலநாள் அலைக்கழிக்கும் உலோபி, ஆகிய இன்னோரன்ன இழிதகைக்கயவருக் குறுகதி தன்னைக் குறுகுவதுடன், கைகேசியின் கைதவத்திற்குத் தான் உடந்தையாயின், மங்கையர் கண்முன் தன்தலை பகைவரைத் தாழ்கவென்றும், போராற்றலைப் புறம்விட்டுப் பற்றலர் இடுசோற்றினைத் தன் கைகள் ஏற்கவென்றும், விலங்கிட்ட காலொடும் பகைவர்முன் தான் விழித்து நிற்க வென்றும் வலிய சாபங்களைத் தன் தலையில் சுமத்திக்கொள்ளுந் துணிவினால் களங்கமற்ற தன் நிலையை விளங்கவைத்தனன். இதனைக்கேட்ட கோசலை,

தூய வாசகஞ் சொன்ன தோன்றலைத்
தீய கானகந் திருவி னீங்கிமுன்
போயி னான்வரக் கண்ட பொம்மலா
ளாய வன்பினா லழுது புல்லினாள்

[தூய்மையான வாசகங்களைச் சொன்ன பரதனை, அரசையிழந்து கொடிய கானகம்போன இராமன் திரும்பிவரக் கண்டவள் போன்ற மகிழ்ச்சியோடு பொருந்திய அன்பினால் கண்ணீர் வடித்துத் தழுவிக்கொண்டாள்]

அறம்அருள் ஆண்மை மெய்ம்மை இறைவன் தொன்மறை மானம் முதலியவைகளின் திறமறிந்து பரதன் ஓதிய தூய வாசகங்கள், குலம் பொறை கற்பிவை சுமந்த கோசலையின் உள்ளத்தை உருக்கின. ஆற்றல் சான்றவன், அறிவு கனி மிக்கவன், எல்லார்க்கும் வேற்

றுமை மாற்றியவள், இன்று தன் மகன் சான்றோனென்பதை அவன் வாய்நின்றே கேட்டவளவில், பிரிந்து சென்ற இராமனை திரும்பி வந்த தன்மை எய்தினாள். எய்தி,

செம்மை நன்மனத் தண்ணல் செய்கையு
மம்மை தீமையு மறித றேற்றினாள்
கொம்மை வெம்முலைக் குமுறு பாலுக
விம்மல் விம்மநின் றழுது வீங்கினாள்

[செவ்விய நல்ல மனதையுடைய பரதனது செய்கையின் சிறப்பையும், அவனுக்கு முலைதந்த தாயின் தீமையின் இழிவையும் எதிரெதிர் நோக்கித் தெளிந்தவளாகி, பருத்த தன் முலைகள் பீரிட்டுப் பால் சொரிய, விம்மிவிம்மியழுது பெருமூச்சு வீங்கினாள்]

உள்ளத்தால் முன் தன் மகனே என்று இராமனை வேற்றுமையின்றிக் கொண்டிருந்த கைகேயி அவனுக்குப் பின் விடமூட்டவும் உடன்பட்ட நிலையினளாக, மாற்றவள் மகனென்று அறிந்தே வேற்றுமையைத்தன் அறிவின் முதிர்ச்சியால் மாற்றியிருந்த கோசலையின் கொம்மை வெம்முலைகள் பரதனுக்கின்று பாலூட்டப் புகுகின்றன. உணர்வின் நசைக்கும் அறிவின் தெளிவிற்குமுள்ள வேற்றுமையிது. ஒன்றமில்வழி உணர்வின் ஊக்கம் பாராட்டற்பாலதேனும், அதனினும் அறிவின தாக்கம் மன்னிய சிறப்பு மிகவுடைத்தாகும் என்னுமவ் வாய்மையைக் கம்பர் இவ்விரு தேவியர் திறத்தில் திருந்தக் காட்டுகின்றனர். அதுவுமன்றி,

முன்னை நுங்குல முதலு ளோர்கள்தாம்
நின்னை யாவரே நிகர்க்கு நீர்மையார்
மன்னர் மன்னவா வென்று வாழ்த்தினாள்
உன்ன வுன்னைநந் துருகி விம்முவாள்

என்பர் கம்பர். தன்மகன் என்று பாவித்த அவ்விராமன் தலையினின்று கைகேசி பறித்தவளாக, இங்குக் கோசலை அன்னவள் மகனுக்கு முடிசூட்டுவாள்போல் 'மன்னர் மன்னவா' என்று வாழ்த்துவதில் ஆழ்ந்துள வேற்றுமைநயம் ஒளியுற விளங்குகின்றது. 'அரசினைத் தீண்டவும் மாட்டேன்' என்று உறவுறவுணர்த்திய பரதனை மீண்டுமிவள் 'மன்னர் மன்னவா', எனவழைத்தல் வன்மஞ் செறிந்த பரிகச உரையாகோதோவென ஐயுறவேண்டியதில்லை. கோசலையிப்புன்மொழிப் பரிகசம்புரியமாட்டாள். வெஃகிய கைகளால் அரசினை வௌவான் திண்ணம்; ஆயினும், வசிட்டனுதியோர் நாயகனில்லாது நாட்டினை விடமாட்டாராதலின் பரதன்மீதப் பாரத்தைச் சுமத்துவாரென்றும், தருமந் தளராதிருக்கும்பொருட்டு அதனைப் பரதன் பொறுத்தே தீரவேண்டுமென்றும் சிந்தித்திருப்பாளாதலின், மன்னர் மன்னவாவென் றவனை வாழ்த்தியது உண்மையோடியன்ற முறைமைத்தாகும்.

அன்ன காலையில் வசிட்டன் வந்தெய்தினான். வருதலும் பரதன் முன் கோசலையை வினவியவாங்கே, "எந்தை யாண்டையான் இயம்புவீர்" எனக் கேட்டவிவ்வுரை அவன் துயரின் கொடுமையைத் துளக்கிக் காட்டுகின்றது. உற்றதுரைத்த அம்முனிவனோடும் போய்ப் பரதன்,

தன்னை நல்கியத் தரும நல்கினான்
பன்னு தொல்லறப் படிவம் நோக்கினான்.

[தன்னைப் பெற்றவனும் அத்தருமத்தைக் காத்தவனுமாகிய தயரதனது புகழ்பெற்ற பழைய அறத்தின் உருவம் போன்ற உடலை நோக்கினான்—தன்னையே கொடுத்துத் தருமத்தைக் காத்த தயரதன் எனினும் ஒக்கும்]

இனி இரண்டொருநாழிகைக்குள் அவன்ஈமத்தீக்கு இரையாகித் தீர்வானதலின் இவைகளே கம்பர் தயரதனைப் பாராட்டி முடிக்கின்ற இறுதிவார்த்தைகளாகின்றன. இதனோடு, அம்மன்னனைத் துவக்கிய முதல்மொழிகளை ஒப்புக்காண வேண்டுமென்னுமோர் ஊக்கம் இயற்கையாவதுடன் பயனுமுடைத்து. இதற்கு இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பத்திரண்டு செய்யுள்களுக்குமுன் பாலகாண்டத்தில், அயோத்திமாநகரின் பெருமைகளையெல்லாம் உரைத்தபின், அரசியற்படலத்தின் முதலில்,

அம்மா ணகருக் கரசன் னரசர்க் கரசன்
செம்மாண் தனிக்கோ லுலகேழி னுஞ்செல்லநின்றான்
இம்மாண் கதைக்கோ ரிறைபாய விராம னென்னும்
மொய்ம்மாண் கழலோன் தருநல் லறமூர்த் தியன்னான்

என்று, நல்லறமூர்த்தியாய் முதன்முதல் களத்தினுள் தோணர்ந்த தயரதனை அவ்வாறே 'தொல்லறப் படிவத்தனாப்' விடைகொடுத்தனுப்பிய கொள்கை, அவ்வேந்தன் யாதும் மாசெய்தாது இயங்கிச்சென்ற பரிசினை ஐயமறப் புலப்படுத்தி நிற்கின்றது. உயிருடன் வருமவனை முன் 'மூர்த்தி' யென்றும், அஃதின்றி ஏகுமவனைப் பின் 'படிவ'மென்றும் வேறுவேறு வகுத்துரைக்கும் நேர்மை சிந்திக்கத்தக்கது. அதுவேயன்றி, இராமனைத் தந்த மேன்மையோனென்னும் புகழுடன் வந்த வம்மன்னன் பரதனை நல்கிய மேன்மையோ னென்னும் புகழுடன் போகு மிம்மாற்றம் கம்பரது பாத்திரங்கள் கதையினோடு வளரும் ஒழுக்கத்தை விளக்காநிற்கும். வளர்கின்ற பாத்திரங்களுக்கொக்கப் புலவரும் தன் கருத்தைத் திருத்திக்கொள்ளும்படி நேர்கின்றது. இவ் வயோத்தியா காண்டத்தின் முதலில், "நிருப நின்குல மன்னவர் நேமி பண்டுருட்டிப் பெருமை யெய்தினர் யாவரே இராமனைப் பெற்றார்" என்று தயரதனைப் பாராட்டிய வசிட்ட மாமுனிவனேபோல், முன்னர்ப் பாலகாண்ட முதலில் கம்பர், காப்பியமிதனை நுவலப்புகுகின்றகாலை இராமனை ஒப்புமுயர்வுமில்லாச் சிறப்பினனென்னுஞ் சிந்தையராய், அன்னதோர் இராமனை அளித்த நலங்கொடு தயரதன் மேன்மையை மாண்புறக் கூறினர்.

இவை பரதன் களத்தினுள் வந்து தனக்குரிய உயர்வினோடு இயங்குவதன்முன் நிகழ்ந்த சிந்தனைகளாம். கம்பரினும் வசிட்டனினும் மிக நெருங்கிப் பரதனுடன் பயின்றுளளாதலின் அறிவும் அன்புஞ்சான்ற கோசலைக்குமாத்திரம் இராமனினும் நல்லனப் பரதன் என்ற வாய்மை முன்னரே தெரியும். அவள் வாய்கேட்ட இவ்வுரையைக் கம்பர் தன் கருத்தினுட்கொண்டார். பின்னர்ப் பரதன் தன்னரிய செய்கையால் கோசலையின் சொற்களை மெய்பட நிலைநிறுத்தினான். "முன்னை நுங்குல முதலுளோர்கள்தாம் நின்னை யாவரே நிகர்க்கு நீர்மையார்" என்றிப்பொழுது இவள் பரதனை வாழ்த்தியதையுங் கேட்டார். ஆயிரம் இராமரும் ஒரு பரதனுக்கு நிகராகார் எனப் பிற்றைநாள் கங்கைவேட்டுவன் குகன் கட்டுரைக்க நிற்பதும் இன்றே இக் கலைஞர்தம் செவியகம் ஒலித்ததுபோலும். இன்னணம் பரதனோடு வளர்ந்த உறவினராகிய கம்பர்பிரான், அவனது குண நலங்களின் தூய மேன்மை உணரப்பெற்று அன்னதோர்

பரதனை நல்கிய பாக்கியத்தையே தயரதன்றன் புகழிற்குரிய பதாகையாக முன்பிடித்து அம்மன்னவன் உடலத்தை நடத்திச் செல்வாராயினர்.

மன்னவன்றன் படிவத்தை நோக்கிய மைந்தன் பரதன் கடுந்துயர் கைம்மிக மண்ணின்மேல் விழுந்தலறி எண்ணெயுண்ட அப் பொன்னெழில்கொள் மேனியைத்தன் கண்ணின் நீரினால் கழுவியாட்டலும் அயலிருந்தோர் பரிவினோடு மவனை அகற்றி, மன்னனை வேறோர் விமானமேற்றிப் புரிசையானையிற் கொண்டு போய்ச் சரயுவின் கரையையெய்தி ஈமப்பள்ளிபடுத்திப் பரதனைக்கொண்டு ஈமத்தீ இடுவிக்கும் வேளையில்வசிட்டன், பரதனுக் கவ்வுரிமை இலதாகவென்று மறுத்துப்போந்த வேந்தனது ஆணையைத் தெரிவித்து விலக்கினான். இவ்விழிவிற் காற்றலன் பரதன். நன்று நன்றெனப் பருவரல் செறிதர முறுவலித்து, இடிக்கிடைந்த வாளரவெனப் படிவிழுந்து, தீராத் துயரந் தன்னுளே துடிக்க,

என்னை என்னையே யீன்று காத்தவென்
அன்னை யாரெனக் கழுகு செய்தவா

என ஏசறவுற்றழுதழுங்கச் சத்துருக்கன் கைகளால் ஈமச்சடங்கு இயற்றலாயபின், மன்னவ னுரிமைமனைவியர் அறுபதினாயிரரும், முழையின்மஞ்ஞைபோலவ் வெரியின் மூழ்கி,

அங்கி நீரினுங் குளிர வம்புயத்
திங்கள் வாண்முகந் திருவி ளங்குறச்
சங்கை தீர்ந்துதங் கணவர் பின்செலு
நங்கை மார்புகு முலக நண்ணினார்.

இதன் பின்னர் மற்றைய கடன்களும் முறையே முடியலாயின. அறுபதினாயிரமாண்டு உறுபகை ஒடுக்கி, அருந்தவ முனிவரும் அந்தணாளரும் வருந்துதலின்றியே வாழ்வில் வைகுற உலகம் ஓம்பிய மன்னன், மக்கள் நால்வரை யீன்றெடுத்தும் தனக்குப்பின் வையகம் சிறிதுகாலம் மறுகுறவிட்டு முடிந்தவனுயது அதிகமும் பரிதற் கொத்ததே.

யாப்பிலக்கணம்

செய்யுள்—கலிப்பா

[836-வது பக்கத் தொடர்ச்சி]

கொச்சகக் கலிப்பா

கலிப்பாவின் மூன்றும் பிரிவாகிய கொச்சகக்கலிப்பாவின் இலக்கணத்தை இனிக் கற்கலாம்.

ஒத்தாழிசைக் கலிப்பாக்களுக்கெல்லாம் தாழிசை இருத்தல் வேண்டும். தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம் என்னுமந் நான்குறுப்புக்கள் மாத்திரம் அவைகளுக்குரிய முறைப்படி அமையுமெனின், நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பாவும், அவைகளோடு அம்போதரங்க உறுப்புஞ் சேருமாயின் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவும், இவைகளோடு அராகமென்னு முறுப்புஞ் சேர்ந்து ஆறுறுப்புக்களும் உடையதாய் அமையுமாயின் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவும் ஆகுமென முன்னர்க் கண்டோம்.

மற்ற வுறுப்புக்களின்றித் தரவுமாத்திரையில் நின்று அத்தரவும் வெண்பாவடிபோல் முச்சீர்பெற்று முடியுமாயின், தளைகளின் தன்மைக்கிணங்க வெண்கலிப்பாவும் கலிவெண்பாவும் ஆகுந்திறத்தையுங் கற்றோம்.

இனி, இவ்வுறுப்புக்களிற் சில இருந்தும் இல்லாமலும், தமக்குரிய முறைமை மாறியும் மிகுந்துங் குறைந்தும் பலவாறாக வருகின்ற கலிப்பாக்களெல்லாம் கொச்சகக் கலிப்பாக்களென்று கொள்க. கலிக்குரிய துள்ளலோசையே இக்கொச்சகக்கலிப்பாக்களுக்கமைந்த பொது இலக்கணமாயினும், சில கொச்சகக் கலிப்பாக்களில் வேற்றோசையுடைய அடிகள் வருதலுங் கூடும். பொதுவில் கலிப்பாவிற் குரியன வல்லவென்று விலக்கப்பட்ட தேமாபுளிமா கருவிளங்கனி கூவிளங்கனி என்னும் நான்குசீர்களும் கொச்சகக் கலியினுள் வருவது மாகலாம். ஐஞ்சீரடியும் வரப்பெறும்.

ஒத்தாழிசைக் கலிப்பாக்களுக்கும் வெண்கலிப்பாக்களுக்கும் ஒவ்வாது வரும் கலிப்பாக்களெல்லாம் கொச்சகக் கலிப்பாவென்று கொள்ளலாம். இதனின்று கொச்சகக் கலிப்பா பல்வேறு வகைப்படக் கூடுமென்பது புலப்படும்:—

1. இயற்றரவு கொச்சகம்—ஒரே தரவு மாத்திரம் நிற்பது.
2. சுரிதகத் தரவு கொச்சகம்—ஒரு தரவும் தனிச்சொல்லும் சுரிதகமும் மாத்திரம் பெற்றது—(தாழிசையில்லை)
3. இயற்றரவிணைக் கொச்சகம்—இடையே தனிச்சொல் பெற்றும் பெறாமலும் இரண்டு தரவுகள் மாத்திரம் பெற்று நிற்பது.
4. சுரிதகத்தரவிணைக் கொச்சகம்-இடையே தனிச்சொல் பெற்றும் பெறாமலும் இரண்டு தரவும் பின் தனிச் சொல்லும் சுரிதகமும் பெற்று வருவது.
5. இயற் சிஃறாழிசைக் கொச்சகம்—இடையிடையே தனிச்சொல் வருவதாகி மூன்று தாழிசைகளைப் பெற்று வருவது.
6. குறைச் சிஃறாழிசைக்கொச்சகம்—இடையிடையே தனிச்சொல் பெறுவதுடன் சீர்குறைந்த ஈற்றடியுடைய மூன்று தாழிசைகளைப் பெற்று வருவது.
7. இயற் பஃறாழிசைக் கொச்சகம்—இடையிடையே தனிச்சொல் பெற்றும் பெறாமலும் பல தாழிசைகளைப் பெற்று வருவது.
8. குறைப் பஃறாழிசைக் கொச்சகம்—இடையிடையே தனிச்சொல் பெற்றும் பெறாமலும் பல தாழிசைகள் வருவதுடன் அத்தாழிசைகளின் ஈற்றடி சீர் குறைந்தமையப் பெற்றுவருவது.
9. இயன் மயங்கிசைக் கொச்சகம்—கலியுறுப்புக்கள் எல்லாம் வரினும், அவை தம்முள் மிக்கும் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் வரப்பெறுவது.

10. அயன் மயங்கிசைக் கொச்சகம்:—கலியுறுப்புக் கள் மிக்குங் குறைந்தும் உறழ்ந்தும் பிறழ்ந்தும் வருதல் மாத்திரமன்றிப் பிறபாக்களும் கலந்து வரப்பெறுவது.

11. தாழிசை யொருபோகு—தரவின்றித் தாழிசை யும் தனிச் சொல்லும் சுரிதகமும் பெற்று வருவது.

12. அம்போதரங்க ஒருபோகு—தரவேனுந் தாழிசையேனும் இலதாகி, அம்போதரங்கம் எண்களிற் சிலவும் பலவுமாய்த் தனிச் சொல்லும் சுரிதகமும் பெற்று வருவது.

13. வண்ணக ஒருபோகு:—தரவேனுந் தாழிசையேனும் இலதாகி, வண்ணகஉறுப்பும் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்று வருவது.

இனி இக்கொச்சகக் கலிப்பாக்களுக்குச் சில உதாரணங்கள் காட்டுவோம்:—

1. இயற்றரவு கோச்சகம்:—

அடிகொண்ட குனிப்பன்றே
யரிபிரமர் முதலானோர்
முடிகொண்ட தலைவணக்கின்
குனிப்பெல்லா முறைமுறைபோய்க்
கடிகொண்ட பொழிற்றில்லை
நடராசன் கழற்காலிற்
குடிகொண்ட படிபோலு
மிடத்தாளிற் குஞ்சிதமே

வேறெவ் வுறுப்புமின்றித் தரவுமாத்திரம் நிற்றலால் இது இயற்றரவு கொச்சகம்.

2. சுரிதகத்தரவு கோச்சகம்:—

தரவு

கற்பனைமேற் கொண்டொழுகுங்
கடைப்பிடியார் வயிற்றிருநாண்
பொற்புறுமாற் றலிற்பொறித்த
பொருவருசெவ் வணிநோக்கித்
தற்பொதிவாட் டுறந்தகெழு
தகைத்தாய புனலூ
னிற்புகலால் வெஞ்சினநஞ்
செனக்கூர்த்த மருனோக்க
முற்பலதென் னமிர்துயிர்த்தற்
றொளிகிளர்சீர் பயின்றனவே

தனிச்சொல்
அஃதன்றால்
சுரிதகம்

அனகனிங் கெமையாண் டருண்மகிழ் மாறன்
புனல்வரங் கூராப் பொருளையுட் புத்தேட்
டினகரோ தயத்திற் செவ்விபெற் றலர்ந்த
தண்மலர் மரைபுரை தகைத்தா
மொண்ணுத லரிவை யொளிர்தரு முகமே.

இது, தாழிசையின்றித் தரவும் தனிச் சொல்லுஞ் சுரிதகமும் பெற்று வந்தது. இதனையும் தரவு மாத்திரம் வரும் இயற்றரவு கொச்சகத்தினையும் பெயரால் வேறு பிரிக்காமல் தரவு கொச்சகம் என்றே இரண்டையும் அழைப்பார் ஒருசா ராசிரியர். வேறு சிலர், தரவு மாத்திரம் நிற்பதைத் தரவுகொச்சகம் என்றும், தரவினோடு தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று வருவதைத் தரவுகொச்சக வொருபோகு என்றும் பிரித்து வழங்குவதும் உண்டு. இது, இயற்றரவிணைக் கொச்சகத்திற்கும் சுரிதகத் தரவிணைக் கொச்சகத்திற்கும் பொருந்துமெனக் கொள்க.

3. இயற்றரவிணைக் கோச்சகம்.

வார்பணிய தாமத்தால் வளைக்கையோர் வண்டோச்ச
வூர்பணிய மதியம்போ னெடுங்குடைக்கீ ழுலாப் [போந்தான்
கூர்பணிய வேற்றுனைக் கொற்கையார் கோமானே.

அவர்க்கண்டு

பூமலர் நறுங்கோதை புவம்பலைப்ப நறுங்கொண்டாற்
றாமலர்க்கண் மடவார்க்குத் தொல்பகையே யன்றியுங்
காவலற்குப் பெரியதோர் கடனுகிக் கிடவாதே.

இது, இடையே தனிச்சொல் பெற்ற இரண்டு தரவுகளாலாய இயற்றரவிணைக் கொச்சகம்.

4. சுரிதகத்தரவிணைக் கோச்சகம்.

தரவு.

1.

குழைதூங்கு கழைமென்றோட் கோமாரி கொலைக் [கண்க
ளிழைதூங்கு முலைக்கண்வைத் தேயெய்தா நாணெய்த
உழைதூங்கு குயினேங்க வுருமுத்தீ யுகநக்கு
மழைதூங்கு பொழிற்றில்லை மணிமன்று ணடஞ் [செய்வோய்

2.

மீனேற்றின் றுவசத்தான் தனிதுஞ்ச விழித்தோய்நின்
னேற்றின் றுவசமோ வடலேற்றி னூர்தியோ
கானேற்ற பைங்கூழின் கவளமாக் கணத்தின்கண்
வானேற்ற பகிரண்டம் வாய்மடுக்க வல்லதே.

தனிச்சொல்
எனவாங்கு
சுரிதகம்.

பைந்துழாய் மவுலிப் பண்ணவ னுவப்ப
அந்தணர் பழிச்சவு மறத்தின் புங்கவன்
முனியான் முனிவன் போலு
மனைய தன்றே யான்றோர் கடனே.

இது தரவு இரண்டும், தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று வந்த சுரிதகத்தரவிணைக் கொச்சகம். தரவிணைக் கொச்சக வொருபோகு என்பதுவும் இது.

5. இயற் சிஃறுழிசைக் கோச்சகம்.

நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பாப் போன்று தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம் என்னும் நான்கு உறுப்புக்களைப் பெறுவதுடன், ஒவ்வொரு தாழிசைக்கு முன்னேயும் ஒரு தனிச்சொல்லும் வருமாயின், அது இயற்சிஃறுழிசைக் கொச்சகம் எனப்படும்.

பரூஉத்தடக்கை மதயானைப்
பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க்
குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் தேரினொடும்
பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான்
கூடலார் கோமானே.

ஆங்கொருசார்

உச்சியார்க் கிறைவனு யுலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனுப் பாவித்தார்
வச்சிரங் காணுத காரணத்தான் மயங்கினரே

ஆங்கொருசார்

அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனுப் பாவித்தார்
சக்கரங் காணுத காரணத்தாற் சமழ்த்தனரே

ஆங்கொருசார் [காச்சென்

மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனுப் பாவித்தார்
வேல்கொண்ட [illegible]

[இவை மூன்றும் மூன்று தனிச்சொற்கள் வரப்பெற்ற தாழிசை]

தனிச்சொல்
அஃதான்று
சுரிதகம்.

கொடித்தே ரண்ணல் கொற்கைக் கோமான்
நிறைபுக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே.

தாழிசைகளின் மூன்றடிகளும் அளவடிகளாகவே இருத்தலின் இது இயற்சிஃறுழிசைக் கொச்சகம் எனலாயிற்று.

6. குறைச் சிஃறுழிசைக் கொச்சகம்

தரவும், தனிச்சொல்கள் இடை இடையேவந்த தாழிசை மூன்றும், தாழிசைக்குப்பின் ஒரு தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றிருப்பதுடன், அத்தாழிசைகளின் ஈற்றடிகளில் சீர்குறைந்துமிருக்குமாயின், அப்பாட்டுக் குறைச்சிஃறுழிசைக் கொச்சகக்கலிப்பாவென அழைக்கப்படும்.

மாயவனுய் முற்றோன்றி மணிநிரைகாத் தணிபெற்ற
வாயரீள் குடையினரா யரசர்கள் பலகூடி
மணிநின்ற மேனியான் மதநகையைப் பெறுகுவார்
அணிநின்ற விடைகொண்டா ரெனச்சொல்லி [யறைந்தனரே.

தானவ்வழி

எழுப்பற்றிச் சனந்துறுமி யெவ்வழியு மியம்ப
விழுக்குற்று நின்றாரும் பலர்

ஆங்கே

வாளுற்ற கண்ணாளை மகிழ்விப்பா மெனக்கருதி
கோளுற்று நின்றாரும் பலர்

ஆண்டே [கேடென்னப்

இத்திறத்தாற் குறையென்னை யிருங்கிளைக்குங்
பற்றுது நின்றாரும் பலர்.

அதுகண்டு

மைவரை நிறத்தன மாலை யியருழக்
கைவரை நில்லாது கடிதேற் றெருத்தொடிப்ப
வழுங்கின ராய மமர்ந்தது சுற்றம்
எழுந்தது பலசன மேறுதொழு விட்டன
கோல வரிவளை தானுங்
கால்வன போலுங் கடிமகிழ் வோர்க்கே.

இது, நான்கடித் தரவும், வேறு வேறு தனிச்சொற்கள் பெற்ற ஈரடித் தாழிசை மூன்றும், பிறகு ஒரு தனிச்சொல்லும் ஆறடியுடைய ஆசிரியச் சுரிதகமும் பெற்றுவந்த சிஃறுழிசைக் கொச்சகக் கலி. தாழிசைகளின் ஈற்றடி சீர்குறைந்திருத்தலால் குறைச் சிஃறுழைசிக் கொச்சகக் கலியாகும்.

பழமுதிர்சோலை.

கண்படாக் கயமை

தலை யிடை கடையாளர்களின் தன்மையை அறிதல்தேற்ற அவாவுவீராயின் அருமை நண்பர்காள் நாலடிப் பொருளுரை பொன்றிங்ஙன் நயந்து கேண்மின்:—

கல்லாக் கழிப்பர் தலையாயார் நல்லவை
துவ்வாக் கழிப்ப ரிடைகள் கடைக
ளினிதுண்ணே மாரப் பெறேம்யா மென்னு
முனிவினுற் கண்பா டிலர்.

[நல்லவைகள் யாவை என்பதைக் கற்பதிலேயே தங் காலத்தைக் கழிப்பர் தலையாவார். தாம் பெற்றுள நலங்களைத் துய்ப்பதிலே காலங்கழிப்பர் இடையாவார். கடையாயர்களோ, உண்மையில் நலந்தருவன யாவையென்று கற்றாயுங் கருத்துமிலாது, அவர்களுக்கு வாய்த்துள சில நலங்களைத் துய்ப்பதுமிலாது, தமக்கில்லாதவைகளை யெல்லாம் எண்ணி எண்ணி, ஐயோ, இவ்வின்பத்தைத் துய்க்கவில்லையே, இப்பொருள்களைத் தாம் பெறவில்லையே என்னத் தம்மை வெறுத்தும் அஃதுடையாரை வெகுண்டும் அமைதியற்று உழல்பவராவார்.]

இவ்விதிகொண்டு, இன்று உலைவுற அலையு மியக்கங்களின் இலக்கணங்களைக் கருத்தூன்றி ஆராயுங்கால் அவைகளின் கயமையைக் காணுங்கண் சும்புளிக்குமே. நல்லவைகளைச் சிலரேனுங் கல்லாது கழிக்குங் கொடுமையா துலகத்திற் கின்னா ளுற்றதுயரன்றே விது.

"சபரி"

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறுதீர்
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.
யுனைடெட் ஸோல் ஏஜண்ட்: கன்வஸான், மதுராஸ்.
டிப்போ: பம்பாய். கல்கத்தா.
"நஞ்சன்கூடு பல்பொடி"
பிராஞ்சு: மதுரை. காஞ்சீபுரம்

1930-வது வருட வால்யூம் - பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும்.

1930-வது ஆண்டு இதழ்கள் கற்போருக்கு மிகவும் பயனளிக்கவல்லது. இந்நாள் மாந்தர் அல்லலே வாழ்க்கையென மயங்கிக் காற்றில்அடிபட்ட துரும்பெனப் பறக்கின்ற பரிபவம் ஈதென்றும், கற்பதின் பயன் அலையடங்கி வாழ்தல் என்றும் விளக்குவது 1930-ஆண்டின் தலையங்கக் கொள்கையாகும். அறியாமை வேண்டப்படும், விஷயத்திற்கேற்ற விளம்பரம், இருபக்கம் எதற்குமுளது, முயலுக்கு முயலவேண்டா, ஒக்க நினைப்பார் உறவு, நல்லோர்கடன், விளம்பினால் வெட்கக்கேடு, எதைக்கண்டு இச்சைகொள்வோம், அலையடங்கவேண்டாவோ, தர்க்கத்தளர்ச்சி, கல்லாதபேர்களே நல்லவர்கள், வண்டிமாடும் மாட்டுவண்டியும், உரிமையாற் பெரியராகார், மானமழிந்தபின், கலைகளே மானங்காக்கும், பள்ளியிற் பழுத்தபழம், சுண்டெலி ஆற்றல், வாலின் நீளம், பெருமையின் பெருமை ஆப பல தலைப்பின்கீழ் விஷயவாய்மை விளக்கப்பட்டுளது.

அவ்வாண்டில் கம்பராமாயணம் அயோத்தியாகாண்டம் ஆரம்பமாயது. முதல் 25 இதழ்களில், மதுரை அறிஞரான ஸ்ரீமான் சோமசுந்தரபாரதியாரது 'கைகேசியின் நிறையும், தசரதன் குறையும்' என்னும் நூல் ஆயப்பட்டுளது. இது கற்றோர்க்கு நல்விருந்தாகும். அறமே நினைத்தும் ஆற்றுவார் இன்னல், கவியைக் கடந்த கருத்து முளதோ, அமரர்க்கோர் கருவியே கேகயி ஆயினள், அறத்தினைக் காக்கவோ வரத்தினை வேண்டினள், கூனியை ஏற்றிய கோபுரமிதுவோ, மன்னவன் புகழைக் கொன்றே மாதராள் பழியைக்காத்தல், என்னும் தலைப்புக்கள் பலவற்றின்கீழ் பாரதியார்நூல் ஆயப்பட்டுளது. கம்பர் வகுக்கும் அமைச்சின் பெருமை ஈதென்று, வள்ளுவர்துணை கொண்டும் வியாதர் உரைகொண்டும் விளக்கப்பட்டுளது. கம்பராமாயணத்தை ஆழ்ந்து படிப்பவர்க்குக் கலாநிலயத்தில் வரையலாகின்ற கட்டுரைகள் பயன் பெரிதளிக்கும்.

இவ்வாண்டில் இலக்கணம் கற்க விரும்புவார்க்கென்று புணரியல் முழுதும் எளியதாகும் வழியில் 50 இதழ்களில் வந்துளது. முயன்று படிப்போர் எளிதில் இலக்கணத்தைக் கற்றுவிடலாம். இலக்கண வல்லுநர்க்கும் எழும் பல சந்தேகங்கள் இங்கு தெளியவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் குறுந்தொகைஎன்னும் சிறந்த சங்கநூல் உரையுடன் பதிப்பிக்கப் பெற்றுளது. குறுந்தொகைஇப்பொழுது புத்தகரூபமாக இல்லையாதலால் இவ்வாண்டு இதழ்கள் அக்குறையைப் பூர்த்திசெய்கின்றது.

இலஞ்சிப்பாவை என்ற நாவலும், ஆச்சரிய சூடாமணி என்னும் நாடகமும் மானத சாத்திரமும், மொழிபெயர்ப்புக் கட்டுரைகளும் வந்துள்ளன.

விலை விபரம் :—

	உள்நாடு	வெளிநாடு
பைண்டு செய்யாதது	7—8—0	9—0—0
காலிகோ கில்ட்	8—8—0	10—0—0
அறை தோல் கில்ட்	9—0—0	10—8—0

புத்தகம் வேண்டுவோர் முன்பணம் அனுப்பி, தங்கள் ஊர் ரயில்வேஸ்டேஷனையும் தெரிவித்தால் To pay போட்டு ரயில்வே பார்சலாக அனுப்புவோம். ரயில்வே கட்டணமும் புத்தகம் ஒன்றிற்கு அணாக்கு மேல் ஆகாது. ரயில் இல்லாத ஊருக்கு போஸ்டில் அனுப்பத் தபால் செலவு ரூ. 2 ஆகும். வேண்டுவோர் புத்தக விலையோடு தபால்செலவுக்கென ரூ 2 சேர்த்து அனுப்பவேண்டும். பர்மா சிலோன் முதலிய விடங்களுக்கு ரயிலில் அனுப்ப இயலாது. பினாங் சிங்கப்பூர் மலேயா முதலிய வெளிநாட்டிலிருப்பவர் தபால் செலவிற்காகப் புத்தகம் ஒன்றிற்கு ரூ 3 சேர்த்து அனுப்பவேண்டும்.

கலாநிலயம், வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906.
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது
1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ்	ரூ. 1,13,55,069.
1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு	11,51,813.
பிரீமியம் வரும்படி	30,83,936.
1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி	7,47,608.

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்
1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.
பிரீமியம் மிகக்குறைவு, பாலிஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமானவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.
ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்
113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.
நாஷனல் பையர் அண்டு ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.
ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
தீ, மோட்டார்கார் மோட்டார் ஸைகில் இன்ஷ்யூரன்ஸ்.
கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

- பாரதி -
சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.
ஓர் தேசிய மாதப் பத்திரிகை.
மூன்றாவது ஆண்டு நடக்கின்றது.
உள் நாடு வருட சந்தா ரூ. 2 0 0
வெளி நாடு " ரூ. 2 8 0
தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.
ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.
ஆசிரியர்:—R. நாராயணசாமி.
விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

ஸ்ரீ வித்வான் த. சண்முகக் கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு
இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.
பாலவிநோதினி ஆபீஸ், 328, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

வர்த்தமானம்

புரொபஸர் ஈன்ஸ்டனின் பிரசங்கம்:—உலக சமாதான மஹா நாட்டில் உலகத்தில் இனிப் போரிலாது செய்யவேண்டிய அவசியத்தைப்பற்றிப் புரொபஸர் ஆல்பர்ட். ஈன்ஸ்டன் செய்த பிரசங்கம் வருமாறு:—

"லையன்ஸில் கூடியிருக்கும் போர்மறுப்பாளர்களின் பிரதிநிதிகளே! நீங்கள் உலகில் இனிப் போர் நடவா வண்ணம் செய்கிற இயக்கத்தினுடைய பிரதிநிதிகளாய் வந்திருக்கிறீர்கள். நீங்கள் அறிவுடனும் அஞ்சாத துணிவுடனும் வேலைசெய்வீர்களானால் உலகில் நிகழும் முயற்சிகளிற் சிறந்ததாகிய உங்கள் முயற்சியில் நீங்கள் மிக்க திறமையுடைய மக்கள் ஆவீர். வாட்படையைப் பார்க்கிலும் எத்தனையோ மடங்கு சிறந்த சக்தியானது உங்களிடம் அடங்கியுள்ளது.

உலகிலுள்ள எல்லா நாட்டார்களும் படைமறுப்பைப்பற்றிப் பேசிவருகிறார்கள். அப்பேச்சுப்பேச்சாக மாத்திரம் நின்றுவிடாமல் அதனைச் செயல்முறைக்குக் கொண்டுவர நீங்கள் அவர்களுக்கு வழிகாட்டல் வேண்டும். அரசியல் நிபுணர்களும் தந்திரிகளும் மாத்திரம் போர்ப்படை மறுப்பைப் பற்றிப் பேசவிட்டு முடியாமல் பெருமக்கள் தாங்களே அதனை எடுத்துச் சிரத்தையுடன் பேசுதல் வேண்டும். போர் இனி நிகழும் அபாய நிலையை நாம் தாண்டிவிட்டோம் என்று நினைக்கிறவர்கள் மூடர்களுடைய இன்பலோகத்தில் வசிக்கிறார்கள். சென்ற ஐரோப்பியப் போரினது கேட்டினை உண்டுபண்ணின போர்க்குணத்தைப் பார்க்கிலும் மிக்க திறலும் அழிபாட்டினையு முடைய ஒரு போர்க் குணத்தை நாம் இன்று எதிர்க்க வேண்டியதாயிருக்கின்றது.

போர்நோக்க முடைமை அரசியலார்களுடைய வேலையாயிருக்கிறது. ஆனால் அவ்வரசியலாருக்குள்ளிருக்கிற மக்களுக்குள் போர்மறுப்புக் கருத்தானது பரவி வருகின்றது. பிரதிநிதிகளாகிய நீங்கள் அஞ்சாத வீரத்துடன் மக்களிடத்தில் போர்மறுப்புக் கருத்தைப் பரப்புதல் வேண்டும். போர்ப்படை மறுப்பு விஷயங்களை மக்களே எடுத்துக் கொண்டு பேசும்படிக்கும் அவர்கள் "நாங்கள் இனிமேல் போரிலாவது, போர்ப்பிரயத்தனத்திலாவது கலந்துகொள்ளமாட்டோம்" என்று சொல்லும்படிக்கும் அவர்களுக்கு நீங்கள் வழிகாட்டுதல் வேண்டும். எல்லா நாடுகளிலுமுள்ள பொதுநலப் பணியாளர்களுக்கும் அவர்களை இனிமேல் சாவு உண்டுபண்ணுகிற போர்க்காரியங்களுக்குக் கருவிகளா யிருத்தலை ஒன்றுசேர்ந்து மறுக்கும்படி நீங்கள் அவர்களுக்குச் சொல்ல வேண்டும். இராணுவசேவைக்கு அரசியலார், போர்வீரர் பதிவு செய்தலை மீறிமறுக்கும் தீர்மானமுடைய இளைஞர்கள் இப்பொழுது பன்னிரண்டு நாடுகளில் இருக்கிறார்கள். அந்த இளைஞர்களெல்லாரும் போரில்லாத உலகை அமைக்க முன்னோடிகளா யிருக்கிறார்கள். உலகசமாதானத்தை உண்மையில் விரும்பும் ஒவ்வொருவரும் அவர்களை ஆதரித்துப் போர்ப்பதிவு மறுப்புக்கு உலகமக்களைத் தூண்டியும், அவர்கள் உள்ளத்தில் நல்லுணர்வை உண்டாக்கியும் உதவிசெய்தல் வேண்டும் என்று நான் சிறப்பாக உலகத்திலுள்ள [illegible]லாரையும் கேட்டுக்கொள்கின்றேன். போர்க்காரியங்களுக்காக ஆராய்ச்சிவேலைசெய்தலை மறுக்கவேண்டும். என்னுடைய சகோதரர்களான இயற்கைநூல்வல்லார்களையெல்லாம், நாட்டுப்பற்றுக் கொள்கைகளை விட்டு உண்மையை மாத்திரம் நாடும்படி வேண்டுகிறேன். நூலாசிரியர்களை யெல்லாம் போர் மறுப்பை ஐயமின்றிச் செய்யும்படி நான் வேண்டுகின்றேன். போர்ச் சேவையை மறுக்கும் வண்ணம் மக்களைத் தூண்டும்படிக்குச் சமாதானத்தை ஆதரிக்கிற பத்திராதிபர்களை எல்லாம் நான் வேண்டுகின்றேன். நீங்கள் எந்த நிலையில் நிற்கிறீர்கள்? நீங்கள் உங்கள் போர்ப்படையைக் கீழே போட்டுவிட்டு நட்புக்கையை நீட்டுகிறதற்கு முன்பாகப் பிறரெல்லாரும் போர்ப்படை மறுப்புச் செய்யவேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கின்றீர்களா என்ற கேள்வியை, பெரிய பதவியும் செல்வாக்கும் உடைய மனிதர்களை வெளிப்படையாய் உங்கள் பத்திரிகைகளில் கேட்கும்படி நான் பத்திராதிபர்களை வேண்டுகின்றேன்.

காலந் தாழ்க்க இப்பொழுது நேரமில்லை. ஒன்று, நீங்கள் போரை ஆதரிக்க வேண்டும்; அல்லது போரை மறுக்கவேண்டும். நீங்கள் போரை ஆதரிப்பதா யிருந்தால் உங்கள் நாட்டுப் போர்ப்படைகளைக் கேட்டினைச் செய்யும் வேலையில் மிக்கத் திறனுடையவைகளா யிருக்கும்படி செய்ய உங்கள் நூலாராய்ச்சியையும் பணவருவாயையும் இயந்திரத்தொழிலையும் கைத்தொழிலையும் சமயக்கல்வியையும் கூடியவரை விருத்தி செய்து அக் கேட்டுவேலைக்குத் துணையாக அமைத்தல் வேண்டும். நீங்கள் போரை மறுப்பதா யிருந்தால் உங்களால் இயன்றவரை மேலே கூறிய துணைகளைக்கொண்டு போர் மறுப்புச் செய்தல்வேண்டும். என்னுடைய இந்த வசனங்களைப் படிக்கின்ற ஒவ்வொருவரையும் இது சம்பந்தமாய் ஒரு திட்டமான தீர்மானத்தைச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தலைமுறை மக்கள் உலகவாழ்க்கையில் இதுவரையும் செய்யாத ஒரு பெரிய முயற்சியை எடுத்துக் கொண்டு அவர்களுடைய முன்னேற்றத்தின் பொருட்டு வேலைசெய்து பின்வருகிற சந்ததி மக்களைப் "போரின் மறக்கொடுமை இனி ஒழிந்தது" என்கின்ற மதிப்பிடக்கூடாத உலக உரிமைக்கு உரியவர்களாகச் செய்வார்களாக. நமக்கு இஷ்ட மிருந்தால் நாம் இதனைச் செய்யக் கூடும். அப்படிச் செய்தற்கு வேண்டியதெல்லாம் போரை வெறுக்கிறவர்கள் எல்லாரும் தங்களுக்கு இனிப் போர்வேண்டாமென்று தைரியமாய்ச் சொல்வதுதான்.

என்னுடைய இந்த வேண்டுகோளுக்குப் பதிலாகப் பல்லாயிரம் பதில் மொழிகள் வரும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். அந்தப் பதில் மொழிகளை எல்லாம் (Profesor Albert Enstin War Resisters International, 11, Abbey Road Enfield, Middlesex, England. என்ற விலாசத்துக்கு அனுப்பவேண்டியது.—(லேகோபகாரி).

[illegible] காப்பக [illegible]
18894 1
[illegible] 600 008

KALANILAYAM.
REG. NO., M'2324.

—:வைத்திய ரத்ன :—

பண்டிட். D. கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபால் பெட்டி. 287. மதருஸ்.

கேடலாக் இனம்.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்ருகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோகா கம்பெனி
லிமிடெட்,
சென்னை.

:: உத்தம தோழன் ::

அறியாமையினுல் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கபபட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

முத்தும் பவழமும்

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்	—	விலை அணு 8.
சுகுணவதி அல்லது மனம்போல மாங்கலியம்	—	விலை ரூபா 1.

எளிய நடையில் எழுதப்பட்ட இனிய தமிழ்ப் புத்தகங்கள். அழகிய பல ஆப்டோன் படங்கள். உயரிய பெதர்வெயிட் காகிதம். யாவரும் படித்து இன்பமடையவேண்டுமென்றே குறைந்தவிலை வைக்கப்பட்டுளது.

விலாசம் :—ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ், மயிலாப்பூர், மதராஸ்.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ், தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ., புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)